# ஆண்டு முழுவதும் 'ஓம் ஸ்ரீஅரவிந்தமிரா'வின் யோக சக்திகள் (366)



திருமூர்த்தி சத்யம்


பதிப்புரிமை ஆசிரியருக்கே
முதல் வெளியீடு 1999

அன்பளிப்பு ரூ. 14

ஆக்கியோன்
திருமூர்த்திசத்யம்
தி மதர் ஹவுஸ், 6. ஸ்ரீஅன்னை (இந்திரா) நகர்
பெத்துசெட்டிபேட் மெயின், லாஸ்பேட் அஞ்சல்
பாண்டிச்சேரி 605 008. போன் : (0413) 238300

அச்சிட்டோர்
துளசி கம்ப்யூட்டர்ஸ்
19, அருணகிரிநகர், நாச்சிக்குறிச்சி
வயலூர் ரோடு, திருச்சி 620 102
பேஜர் எண் 9652 - 853800

# ஆண்டு முழுவதும் 'ஓம் ஸ்ரீஅரவிந்தமிரா'வின் யோக சக்திகள் (366)



திருமூர்த்தி சத்யம்

# முன்னுரை

வாசக அன்பர்களுக்கு நமஸ்காரம். ஆண்டு முழுவதும் 'ஓம் ஸ்ரீஅரவிந்தமிரா'வின் யோகசக்திகள், மனித சமுதாயத்திற்கு உண்மைநிலையறிந்து வாழ, ஸ்ரீஅன்னையை அன்புடன் நெருங்கிட உதவலாம்.

நாள் ஒன்றுக்கு ஒன்று வீதம் உரிய தேதியில் அதைப்படித்து சிந்தித்து நாள் முழுக்க ஸ்ரீஅன்னையின் உணர்வாவது உயர்வாம். சொந்த அனுபவநிலையும் அன்றன்று உதிக்கலாம். உண்மைக்கு உண்மையே ஒளியூட்டுமாம்.

காலங்கடந்த காலத்திலிருக்க, அமர, நித்திய கால் நமது ஸ்ரீஅரவிந்தமிராக்களைத் தொழுதே பொழுது புலரட்டும். அருளே அவனியாகட்டும். அன்பே அனைவறாம். அனுபவம் அந்தராத்மாவிற்காம்.

சைத்திய புருஷனைக் கண்டு பெரிதும் பயனுறவே பாரினில் பிறந்தோம். ஸ்ரீஅரவிந்தர் அமைத்தது. ஸ்ரீஅன்னையின் பாதுகாப்பும், ஆசியும் நம் எல்லோரையும் ஆட்கொள்ள பிரார்த்திக்கும் கடையன்.

திருமூர்த்தி சத்யம்

* * *

## ஆண்டு முழுவதும்
## 'ஓம் ஸ்ரீ அரவிந்தமிரா'வின் யோக சக்திகள்
## (366)

| | |
|---|---|
| ஜனவரி 1 | *ஐஸ்வர்யநாள் ஆஸ்ரமத்தில் இசை தியானம் ஸ்ரீஅன்னையின் அருள்கீழ் இயற்கையை வெல்பவரை நாடி உதவுகிறது.* |
| ஜனவரி 2 | *விதி ஸ்ரீஅன்னையை தனது இச்சா சக்தியால் நிலைநிறுத்துவதைப் பொறுத்து மாறுவது* |
| ஜனவரி 3 | *ஸ்ரீஅன்னைமீதான பக்தி எதாலும் பாதிக்கா சிரத்தையால் வளர்வது* |
| ஜனவரி 4 | *தெய்வ அன்பு அகந்தையில்லா அந்தராத்ம ஸ்ரீஅன்னையுள் உதிப்பது* |
| ஜனவரி 5 | *உண்மைத் தெளிவு உள்ளார்ந்த ஸ்ரீஅன்னையின் பிரசன்ன அமைதியால் விளைவது* |
| ஜனவரி 6 | *முன்னேற்றம் முழுமையான முறையறிந்து உழைத்து ஸ்ரீஅன்னையின் உணர்வானது.* |
| ஜனவரி 7 | *ஸ்ரீஅன்னையை அந்தராத்மாவில் கண்டு அவள் ஆணைப்படி வாழ்வதே உண்மை பிறப்பாம்.* |
| ஜனவரி 8 | *தெய்வீக வாழ்வமைவது ஸ்ரீஅன்னையின் உதவியால் (சைத்தன்யத்தை) அந்தராத் மாவை வளர்ப்பது.* |
| ஜனவரி 9 | *சாவு என்பது ஸ்ரீஅன்னைவழி ஆன்மீகத்தை அடையாதிருப்பது.* |
| ஜனவரி 10 | *நட்பு என்பது பகவான் ஸ்ரீஅரவிந்தரின் தொடர்பு அகத்திலாவது.* |

| | |
|---|---|
| ஜனவரி 11 | மகிழ்வு என்பது ஸ்ரீஅன்னையின் பிரசன்னத்தை புனித பூமியில் நிலைக்க தொண்டாற்றுவது. |
| ஜனவரி 12 | வாழ்வனைத்தும் யோகமாகிட அணுவி லிருந்து அண்டம்வரை ஸ்ரீஅன்னையைக் காண்பது |
| ஜனவரி 13 | கர்மம் என்பது தனது பிறப்பின் உண்மையைக்கண்டு ஸ்ரீஅன்னைக்காக புவியில் வெளிப்படுத்துவது. |
| ஜனவரி 14 | புவிவாழ்வு ஸ்ரீஅரவிந்தரின் அதிமனித சமுதாயத்தை ஸ்ரீஅன்னை உணர்வால் உருவாக்க வாழ்வது |
| ஜனவரி 15 | புற வாழ்வே அகத்தில் ஸ்ரீஅன்னையின் உணர்வு உயர்வின் அளவுகோல். |
| ஜனவரி 16 | அகவாழ்வு அந்ராத்ம ஸ்ரீஅன்னை உணர்வினுள் ஸ்ரீஅரவிந்த அதிமன உணர்வு வளர்ச்சியே அளவுகோல் |
| ஜனவரி 17 | சைத்திய வாழ்வு அதிமன ஸ்ரீஅன்னை யாவதின் அளவுகோல் |
| ஜனவரி 18 | அதிமன வாழ்வு ஸ்ரீஅரவிந்தரின் அதிமனபரிணாமம் சைத்திய புருஷனுள் ஸ்ரீஅன்னையால் பரிணமிப்பதின் அளவிற் கேற்பவாம் |
| ஜனவரி 19 | ஸ்ரீஅரவிந்தரைக் கண்டோர் ஸ்ரீஅன்னை யின் உணர்வில் வாழ்கிறார் என்பதின் அடையாளம். |
| ஜனவரி 20 | ஸ்ரீஅன்னை ஸ்ரீஅரவிந்தரின் அனைத்து நூல்களையும் படித்தவர் ஒருங்கிணைந்த யோகம் செய்யும் சாதகறாகிறார். |
| ஜனவரி 21 | ஸ்ரீஅன்னை ஸ்ரீஅரவிந்தரின் படங்களுக்கு மலர்களை நித்தமும் அர்பணிப்பது நித்தமும் |

தெய்வீக உணர்வில் வளர்வதற்கு அடையாளம்.

ஜனவரி 22 மக்களின் இதயத்தில் ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னையை நிரந்தரமாக நிலைநிறுத்த உதவிய சாதகர் அழிவற்ற வாழ்வு வாழ வழிக்கண்டவறாவார்.

ஜனவரி 23 தன்னுள் உள்ள ஸ்ரீஅன்னையின் வழிகாட்டுதலில் வாழ்வோருக்கு ஆபத்தோ அழிவோ இல்லை. அதிமன வாழ்வு நிச்சயம்

ஜனவரி 24 உலகில் ஆதாய நோக்கோடு வாழ்வோரே அதிகம். பிரதிபலனை நோக்காத வாழ்வு உளமாற ஸ்ரீஅன்னையை பூஜிப்போருக்கு உண்டு.

ஜனவரி 25 உலக வாழ்வில் வெற்றிபெறாதவறாயினும் ஸ்ரீஅன்னையை நிலையாக உள்ளத்தில் நிறுத்தியவர் பூரணயோகத்தைப் பயில தகுதிபடைத்தவறாவார்.

ஜனவரி 26 சாதகர் எழுதுவது அகங்கார உணர்வைத் தூண்டின் அவர் பொய்மையின் கருவியாவார். ஸ்ரீஅன்னையின் சைத்திய ஒளியை உணரச் செய்யின் அவர் உண்மையின் கருவியாவார்.

ஜனவரி 27 ஸ்ரீஅன்னை மட்டுமே எனக்கு வேண்டும் என்பவரை உறைபனியோ, எரிக்கும் கதிரவனோ ஒன்றும் செய்திட முடியாது.

ஜனவரி 28 ஸ்ரீஅன்னையை முழு உள்ளத்தோடு நம்பியவரை பெரும் அசுரறாயினும் விஸ்வ தேவறாயினும் அசைக்கவோ, ஆட்கொள்ளவோ முடியாது.

ஜனவரி 29 ஸ்ரீஅன்னையின் பணி எதுவாகினும் சமமானதே. ஆனால் மலர்ப்பணியைப் போல துரிதமாக ‘அவளிடம்’ நெருங்க வைப்பது வேறு எதுவுமில்லை.

ஜனவரி 30 இனி இழப்பதற்கு ஒன்றும் இல்லை என்ற நிலையிலும் ஸ்ரீஅன்னையை இதயத்தின் ஆழத்தில் அகலாது வைத்தவருக்கு உதவ உலகமே முன்வரும்.

ஜனவரி 31 எவ்வித சக்தியாயினும் உன்னை எதிர்க்கும்போது அதை கரைத்து ஸ்ரீஅன்னையின் சக்தியை நிலை நிறுத்தப் பழகிய உனக்கு இன்னலேது?

பிப்ரவரி 1 ஸ்ரீஅன்னைக்கும் உனக்கும் உள்ள தொடர்பினை துண்டிக்க துணிவோர் எவராயினும் தோற்பது நிச்சயம்.

பிப்ரவரி 2 ஸ்ரீஅன்னைக்கும் உனக்கும் உள்ள தொடர்பினை சுடர்விட்டு ஒளிர உதவுவோர்க்கு ஸ்ரீஅன்னையின் அருள் மழை பொழிந்தவண்ணம் இருக்கும்

பிப்ரவரி 3 எவ்விதத் தடையையும் தகர்க்கும் திறன் ஸ்ரீஅன்னையின் குழந்தைக்கு உண்டு.

பிப்ரவரி 4 வளர்கின்ற வருகின்ற ஸ்ரீஅன்னையின் அருளினை ஆன்மீக வளர்ச்சிக்கு மட்டும் பயன்படுத்துபவரே சாதகறாவார்.

பிப்ரவரி 5 ஸ்ரீஅன்னையின் அருளினை மட்டும் வேண்டிநிற்கும் உமக்கு உதவாப்பேச்சு, சிதறும் சிந்தனை, கறைபடிந்த கண்கள் எதற்கு?

பிப்ரவரி 6 ஸ்ரீஅன்னையை முன்னைவைத்து செய்கின்ற எல்லாச் செயலும் உயர் உணர்விற்கு இட்டுச் செல்பவையே

பிப்ரவரி 7 பிராணன் ஸ்ரீஅன்னைக்கு செய்யும் சேவையால் வலுவடைகிறது.

பிப்ரவரி 8 உமக்கு பிறர் எவ்விதத் தீங்குசெய்யினும் அவர் நினைப்பு உம்மை தாக்காமலிருக்க ஸ்ரீஅன்னையை வேண்டினால் அது உம்மை

பாதிக்காது. அவரும் தனதுண்மைக்கு உயர்த்தப்படுவார்.

பிப்ரவரி 9 ஸ்ரீஅன்னையின் உண்மைக்குழந்தையாக மாற ஒரேவழி இடைவிடாது முழு உணர்வோடு, முழு உள்ளத்தால் 'அவள்' நினைவாகவே இருப்பது.

பிப்ரவரி 10 அமைதியில்லை என அவதியுறாதே. ஸ்ரீஅன்னையின் பணியில் ஈடுபட ஈடுபட அமைதி ஆனந்தம் வருவதை அனுபவிப்பாய்.

பிப்ரவரி 11 ஸ்ரீஅரவிந்தரின் அதிமனித சமுதாயம் ஆவதற்குத் தடையான சக்தியைத் தகர்க்கவும், துணையிருப்பவற்றை இணைக்கவும் பழக்கப்படு. புவியில் அழிவு சக்தி குறைந்து ஆக்க சக்தி அதிகரிக்கும்.

பிப்ரவரி 12 தனது சைத்திய இருக்கையில் ஸ்ரீஅன்னையை உணர்வதைவிட உண்மையான ஆனந்தம் வேறில்லை.

பிப்ரவரி 13 ஸ்ரீஅன்னையின் ஒளியைக் கண்டோரை லௌகீக வாழ்வு எத்துணை வலுக் கொண்டும் ஆட்கொள்ள முடியாது. சைத்தியஒளி உடையவரே அவரை அறிவர், அணுகுவர்.

பிப்ரவரி 14 தனது பலவீனத்தை முழுமையாக ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணிக்கத் தெரிந்தவர் பிறர் பலவீனங்களை அவர்களே அறியாவண்ணம் நீக்கும் வல்லமை பெறுவர்.

பிப்ரவரி 15 ஸ்ரீஅன்னையை அகத்திலோ, நினைவிலோ, கனவிலோ, புறப்டத்திலோ கண்டாலே கடவுள்தன்மையாம், காரியசித்தியாம்.

பிப்ரவரி 16 உள்ளிருப்பதே வெளி நிகழ்ச்சிகள் தான் விரும்புவதற்கு மாறாக நடக்கும் நிகழ்ச்சிகளே பொதுவாக சாதகருக்கு அதிக ஆன்மீக சக்திகளை ஊட்டும்.

பிப்ரவரி 17 எதிரான நிகழ்ச்சிகளை சாகதமாக்கியவரே பூரணயோக சாதகறாவார்.

பிப்ரவரி 18 இனிய ஸ்ரீஅன்னையே எமது கிரகிக்கும் தன்மையால் உமது சக்தியை அருள இறைஞ்சுகிறோம்.

பிப்ரவரி 19 சைத்திய ஸ்ரீஅன்னையே எமது ஆர்வம் உமது உயர்பிராணனால் எமது உயிர் உன்னதமாகிட அருள வேண்டுகிறோம்.

பிப்ரவரி 20 ஓ மகாகாளி ஸ்ரீஅன்னையே நமது விடாமுயற்சியால் உமது ஒளி ஊடுருவி இருளில்லா இறை வெற்றியருள பிரார்த்திக்கிறோம்.

பிப்ரவரி 21 ஆஸ்ரம தரிசனநாள். நமது பணிவால் ஸ்ரீஅன்னையின் உணர்வு நமது ஜீவனை நிறைவுக்கு உள்ளாக்குகிறதாம். ஸ்ரீஅன்னையின் பிறந்தநாளான இன்று புவியின் புனிதநாளாம்.

பிப்ரவரி 22 நமது சைத்திய புருஷனான ஸ்ரீஅன்னையே எமக்கு பேரானந்தமாம் அனுதினமும் நன்றியுடையவறாகிறோம்.

பிப்ரவரி 23 நமது நேர்மை ஒன்றே என்றும் அழியா அமர ஸ்ரீஅன்னையின் கருவியாம்.

பிப்ரவரி 24 நமது நல்ல குணமே ஸ்ரீஅன்னை மீதான பக்தி முன்னேற்றமாம்.

பிப்ரவரி 25 ஸ்ரீஅன்னைவழி ஏக துணிவோறே கர்மவினையற்ற நற்பிறப்பானவறாம்.

பிப்ரவரி 26 ஸ்ரீஅன்னையின் குழ்ந்தைகள் முன்னேற்றம் பதினாறுவகை ஐஸ்வரியத்தை அடைவது திண்ணமாம்.

பிப்ரவரி 27 குறையிலா நிறை உண்மையான அமைதி ஸ்ரீஅன்னையுள் முழுமையாக ஒன்றுவதாம்.

| | |
|---|---|
| பிப்ரவரி 28 | உண்மை சமத்துவம் ஸ்ரீஅன்னையிடம் இணக்கமாவதேயாம். |
| பிப்ரவரி 29 | ஸ்ரீஅரவிந்தரின் அதிமன பொன்னாள். 1956ல் நிகழ்ந்தது. என்றுமே இறைவனின் நாளாம் பரமன் பாருக்கு ஸ்ரீஅன்னையால் அருளியதாம். |
| மார்ச் 1 | என்றும் இளமையாகிடும் உதாரகுணம் ஸ்ரீஅன்னையை பூஜிப்பதனாலாம். |
| மார்ச் 2 | ஸ்ரீஅரவிந்தரின் யோகத்தை நன்கு புரிந்து செய்பட அருளிட வேண்டுகிறோம் ஸ்ரீஅன்னையையே |
| மார்ச் 3 | பூரண யோகமே நமது மூச்சாகிட ஒரு முனைப்புக்கோரி ஸ்ரீஅன்னையின் பாதமே கதியாகிடுவோமாக. |
| மார்ச் 4 | நெற்றிக்கண், ஞானக்கண், இவ்வூனக் கண்ணுள்ளும் ஸ்ரீஅன்னையின் புத்துலகுக் காட்சியாகிட தபமிருப்போமாக. |
| மார்ச் 5 | ஸ்ரீஅன்னையின் உணர்வோடு நிவேதித்து உண்பதால் உன்னதமாவோமாக. |
| மார்ச் 6 | நமது குரல்மையத்தில் பதினாறு வகை ஸ்ரீஅன்னையின் அருள்வாக்காக பேச்சை அமைத்திடுவோமாக |
| மார்ச் 7 | தனது சைத்திய புருஷனுள் ஸ்ரீஅன்னையைக் காணாதவரை மனிதன் நிறைவுறான். |
| மார்ச் 8 | மனம் ஸ்ரீஅன்னையின் ஒளியால் தெளிவாகி சைத்திய மனமாகிட பிரார்த்திப்போமாக. |
| மார்ச் 9 | புலணர்வில் ஸ்ரீஅன்னையின் உணர்வால் அமரத்துவம் மிளிர விழிப்பாகிடுவோமாக. |
| மார்ச் 10 | உலகுயிர்களனைத்தும் ஸ்ரீஅன்னையின் வலிமையாகிட அவளுடமையாவோமாக |

மார்ச் 11 ஸ்ரீஅரவிந்தரின் சித்தமே ஸ்ரீஅன்னையின் வெளிப்பாடாம் நமக்கு அதுவே செயல்பாடாம்.

மார்ச் 12 புவியின் பூரண உண்மை ஸ்ரீஅரவிந்த யோகத்திலாம். அந்தராத்மாவில் வாழ்ந்து ஸ்ரீஅன்னைவழியாவோம்.

மார்ச் 13 சரியான ஒழுங்கு ஸ்ரீஅன்னையால் வடிவமைக்கப்படுகிறதாம்.

மார்ச் 14 ஒருமை உணர்வு ஸ்ரீஅரவிந்த ஆசிரம தரிசன நாளில் ஏற்படுகிறதாம். ஸ்ரீஅன்னையின் பிரசன்னமே சான்றாம்.

மார்ச் 15 ஆதியும் அந்தமும் எல்லையிலா அமர ஸ்ரீஅன்னையை அமைதி, மோனத்தால் வந்தனை செய்வோம்.

மார்ச் 16 மானிட உருவே ஸ்ரீஅன்னையின் உணர்வாகிடத்தான்.

மார்ச் 17 உண்மை ஞானம் ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னையை அனுபவமாக அறிதலாம்.

மார்ச் 18 உலகு உய்வுற இசைவுற இனிய ஸ்ரீஅன்னையே அவதரித்துள்ளார்.

மார்ச் 19 கருணை இரக்கப்படுவதல்ல. இறைத் தன்மையாக்குவதாகும். ஸ்ரீஅன்னை அவனியை அதி உலகாக்குகிறார்.

மார்ச் 20 அந்தராத்ம அழகு ஸ்ரீஅன்னையின் சிந்தனை, செயல், பேச்சு போன்ற புறத்திலாக்கிட நன்மை மிகுமாம் அழியா அமர அழகாம்.

மார்ச் 21 இறையன்பு, சைத்திய அன்பு, அதிமன அன்புதனை அனுபவிப்பது எப்போதோ? ஸ்ரீஅன்னையிடம் அன்புறுவோம்.

மார்ச் 22 இறைவனின் வெற்றி முடிவாம். ஸ்ரீஅன்னையின் பாதச்சரணம் துரித பரிணமிப்பாம்.

மார்ச் 23 தனது இயற்கை சுபாவத்தை தூய்மைப்படுத்தும் சாதகர் ஸ்ரீஅன்னைக்கு ஜீவனை அர்ப்பணித்து சைத்திய ஆன்மீகமாற்றமடைவர்.

மார்ச் 24 ஓ ஸ்ரீஅன்னையே எமது சக்திகளனைத்தும் வாழும் காலமனைத்தும் உமதுடமையாக்கி அருள ஆர்வமுறுகிறோம்.

மார்ச் 25 ஸ்ரீஅன்னையை ஜீவனுள் நிறுத்தி இயற்கையை ஆன்மீக மாற்றம் செய்யும் சாதகர் ஆன்ம ஒளி, சாந்தம், தூய்மை, ஞானம், பக்தியுடையோறாம்.

மார்ச் 26 ஸ்ரீஅன்னையின் உணர்வோடு பேச்சு, உணர்ச்சி, படைப்பு, செயல் விளங்க தூய்மையுறுவோமாக.

மார்ச் 27 குறுகிய தூல உணர்வு ஸ்ரீஅன்னையால் அனந்தநிலையாகி இயற்கை இறவாமை, இன்னிலை எய்துகிறதாம்.

மார்ச் 28 ஆரோவில் பிறந்ததினம். அதிமன பொன்னொளி ஞாயிறாக இப்புவி நிலவிட ஸ்ரீஅன்னை ஆயத்தப் படுத்துகிறார். நாம் அவளின் குழந்தையாவோம்.

மார்ச் 29 1914 ஸ்ரீஅரவிந்தரும் ஸ்ரீஅன்னையும் முதலன்முதலாக புதுவையில் சந்தித்த புதுயுக, புதிய யோக, புவியே சைத்திய அதிமன உணர்வாகிய நன்நாளாம். எதிர்காலநம்பிக்கையூட்டுவதாம்.

மார்ச் 30 உணர்வு முழுவதும் ஸ்ரீஅன்னைமீது ஒருமுகப்படுத்தி ஒருமுனைப்பது தியானத்தைவிட சிறந்தது. விரும்புவது கைக்கூடலாம்.

மார்ச் 31 ஸ்ரீஅன்னைக்கு மாறானதை விலக்கி பூரணமானவறால் முழு உலகையும் உய்விக்க காக்கமுடியும்.

ஏப்ரல் 1 ஸ்ரீஅன்னையை முழுமையாக நம்பிய வருக்கும் என்றென்றும் அன்பும் ஆனந்தமயமுமான சூழலே உருவாகுகிற தாம்.

ஏப்ரல் 2 உலகந்தோன்றிய நாளிலிருந்தே ஏதோ ஒரு உருவில் ஸ்ரீஅரவிந்தர் தோன்றியதை ஸ்ரீஅன்னையின் குழந்தைகள் உண்மை யென உணர்கிறார்கள்.

ஏப்ரல் 3 ஸ்ரீஅன்னையின் கருவியான சைத்திய புருஷனுக்கு உதாவதை பரிணாம் உடைத்து உயருகிறதாம்.

ஏப்ரல் 4 ஸ்ரீஅரவிந்தர் புதுவைக்கு வந்தது. ஆஸ்ரம டைனிங் ரூம் பிறந்ததினம். மனித உடலே ஸ்ரீஅன்னையின் யோகவாழ்வு மலர உகந்ததாம். வாய்ப்பினை பயனுறச் செய்வோம்.

ஏப்ரல் 5 உண்மை அர்ப்பணம் ஸ்ரீஅன்னைக்கு திறவினை அந்தராத்மாவில் ஏற்படுத்து கிறதாம்.

ஏப்ரல் 6 சொர்க்கம், ஜாதகம், சடங்கு போன்றவை உண்மையான ஸ்ரீஅன்னையின் குழந்தைக்கு கட்டுக்கதைப்போலாம்.

ஏப்ரல் 7 தளைகள் களைய அகத்தில் ஸ்ரீஅன்னையை க்காண். முகத்தில் முனைப்பு வெளிப்படும்.

ஏப்ரல் 8 ஸ்ரீஅன்னையின் உணர்வே மதி. வினையின் விளைவுகளை மாற்றிடுமாம்.

ஏப்ரல் 9 விதிக்கு விதியான ஸ்ரீஅரவிந்தரின் அதிமனத்தால் இனிய இவ்வுலகினில் ஆகாதது இருக்காதாம்.

ஏப்ரல் 10 ஸ்ரீஅன்னைமீதான பக்தி பரவச பூரண நம்பிக்கையுள்ள உண்மைபிரார்த்தனை அதிக சக்தியுடையதாம்.

ஏப்ரல் 11 ஸ்ரீஅன்னைமீது நேரடியாக ஏற்படும் பக்தி, அன்பு, ஆர்வம், தொண்டு இவற்றால் சைத்திய அருளைப் பெறும் வழியாம்.

ஏப்ரல் 12 ஸ்ரீஅரவிந்த மிராக்கள் நம்முள் சுற்றி, மேலே கீழே எங்கும் சூழ்ந்துள்ளதை கனல் ஆர்வத்தால் கண்டு களிப்புறுவோமாக.

ஏப்ரல் 13 ஸ்ரீஅரவிந்தரின் அதிமனயோகம் வேத, உபநிடத்தினுடையதல்ல நேரடி ஞானமாவதால் முற்றிலும் புதியது. ஸ்ரீஅன்னையால் புதியபடைப்பானது.

ஏப்ரல் 14 ஸ்ரீஅன்னைமீதான பக்தி சிரத்தையால் அகத்தில் கண்கூசச் செய்யும் ஒளி பிரகாசத்தை உணர்வோரும் உலகிலுண்டு.

ஏப்ரல் 15 தன்னலமற்ற தியாக சாதகர் எடுப்பதில்லை அர்ப்பணிப்பதால் ஸ்ரீஅன்னையின் புத்தொளி புது வாழ்வமைக்கிறதாம்.

ஏப்ரல் 16 ஸ்ரீஅன்னையின் குழந்தைகள் பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதே உண்மையான நன்றியுடையதாம்.

ஏப்ரல் 17 அருட்பெருஞ்ஜோதி ராமலிங்க வள்ளலார் அதிமன ஒளி என்பர். ஸ்ரீகிருஷ்ணர் ஆனந்தமயத்திற்கு உலக பரிணாமத்தை இட்டுச்செல்பவர். ஸ்ரீஅரவிந்தர் அதிமன வெளிப்பாட்டினை பூமிக்குள்ளாக்கியவர்.

ஏப்ரல் 18 மனோசக்தி நிச்சயத்தால் ஸ்ரீஅன்னையின் மூலம் ஸ்ரீஅரவிந்த யோகத்தையடைய எல்லோருக்கும் சாத்தியமாம் விதிவிலக்கில்லை.

ஏப்ரல் 19 அகங்காரமற்ற கனலேறிய ஆர்வத்தால் மனித உணர்வு ஸ்ரீஅன்னையின் எல்லாவற்றையும் ஏற்கமுடியும்.

ஏப்ரல் 20 தனது உண்மையைத் தான் ஏமாற்றாவிடில் ஸ்ரீஅன்னை வழி ஆன்மீகம் வெற்றியே.

ஏப்ரல் 21 நம்முள் உள்ள அந்தராத்ம ஸ்ரீஅன்னையே நமது பிற மன, உடல், பிராண, அடிமனம், உள்ளியல்பு, அவசேதனத்தை ஆளச் செய்வதே கீழ் இயற்கையை வென்றதாம்.

ஏப்ரல் 22 ஸ்ரீஅன்னையின் பிரசன்னத்தை நிரந்தரமாக தன்னுள் மிக ஆழத்தில் கொள்வதே அந்தராத்மா, சைத்தியபுருஷன்.

ஏப்ரல் 23 ஸ்ரீஅன்னையின் வழிகாட்டுதலை சைத்திய புருஷனிலிருந்தே செயல்படுத்த இசைவு, அமைதி, ஒளி, அருள் முன்னேற்றம் உண்டாம்.

ஏப்ரல் 24 தரிசனநாள். ஸ்ரீஅன்னை ஆசிரமத்தில் வந்து இறுதியாகத் தங்கியது. அந்தராத்மா ஸ்ரீஅன்னையுள் வாழ்வோர் அஞ்சுவதோ ஐயுறுவதோ இல்லையாம்.

ஏப்ரல் 25 எவ்வித எதிர்ப்பும் ஸ்ரீஅன்னையின் உணர்வானோர் முன்பு கரைந்திடுமாம்.

ஏப்ரல் 26 சைத்திய ஒளியுள்ளோருக்கு ஸ்ரீஅன்னை யின்றி வாழ்வு வெறுப்பாம்.

ஏப்ரல் 27 ஆழ்ந்த மோனத்தினால் ஸ்ரீஅன்னையின் ஆணைப்படி வாழ்வமைக்க வாய்ப்பாம்.

ஏப்ரல் 28 சதாகாலமும் தீவிர ஆர்வ உணர்வு முழுவதும் ஸ்ரீஅன்னை மூச்சானால் பூரணயோக சித்தியாம்.

ஏப்ரல் 29 பொய்மை, அறியாமை பலவீனம் விலகிட ஸ்ரீஅன்னையின் ஆன்மீக வெளிப்பாட்டினை செயல்படுத்துவதே உண்மையான உயரிய நாகரீகம்.

ஏப்ரல் 30 துன்பமில்லா ஆனந்தவாழ்வு மலர ஸ்ரீஅன்னைக்கு மலர்களை அர்ப்பணிப் போமாக.

| | |
|---|---|
| மே 1 | உலகில் துன்பத்தை ஏற்படுத்தும் பகைசக்திகளை விலக்கி நித்திய ஆனந்தத்தை அருள்வது ஸ்ரீஅன்னையின் உருவேயாம். |
| மே 2 | தூய ஸ்ரீஅன்னையின் குழந்தைகளிடம் கெட்ட கெட்ட சக்திகள் நெருங்கினால் எரிக்கப் படுகிறது. |
| மே 3 | ஸ்ரீஅன்னையின் அன்பு கடினத்தை மிருதுவாக்குகிறது. மென்மையை தூய ஆவியாக்கி திருஉருப்பெறச் செய்கிறது. |
| மே 4 | தூய, உன்னத ஸ்ரீஅன்னையின் அன்பு நொடிப்பொழுதில் ஜீவ தடங்கள், தவறு, பலவீனம், கெட்ட எண்ணங்கள் போன்ற கறையை நீக்குகிறது. |
| மே 5 | ஸ்ரீஅன்னையின் உணர்வான குழந்தைகள் குவலயமுழுவதும் உள்ள இதயங்களுக்கு உள்ளாக மூல உண்மையாகிறார்கள். |
| மே 6 | அந்தராத்மாவை கண்டவரே உண்மை மனிதர். அங்கு ஸ்ரீஅன்னையுடன் உறவு உண்டாகி தெய்வத்துவம் வெளிப்படுவது சிறப்பாம். |
| மே 7 | அந்தராத்ம ஸ்ரீஅன்னையைக்கண்டவர் சுதந்தரமானவர், சமத்துவமானவர் சகோதரத்துவமானவர் மேலாக அகத்துவமானவர். |
| மே 8 | உயிருள்ள உண்மை ஆன்ம அனுபவத்தை ஸ்ரீஅரவிந்தயோகம் வீறுகொண்டு ஸ்ரீஅன்னைமூலம் வெளிப்படுத்துகிறதாம். |
| மே 9 | ஸ்ரீஅரவிந்த யோகத்தில் ஸ்ரீஅன்னையால் மட்டுமே திருஉருமாற்றப்பணி நடைபெறு கிறது. |
| மே 10 | ஸ்ரீஅன்னையின் உணர்வானோர் எல்லா சமயநெறிக் கடந்தசாதகறாகிறார். |

மே 11 தனது வேலையை, உடலுழைப்பை, உடலை ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணிப்பதே சிறந்த சரணம்.

மே 12 நெஞ்சின் மைய இருதய சக்கரத்தில் உள்நோக்கிய திறவாகி வெகு ஆழத்தில் சைத்திய ஸ்ரீஅன்னையைக் காண்பதே உயிருள்ள தெய்வீகம்.

மே 13 ஸ்ரீஅன்னையை பூஜிப்போருக்கு பொய்மை தடையாம். மெய்மையை கூறக்கூடாத இடத்தில் கூறாவிடில் பரவாயில்லை. பொய்அற.

மே 14 வரும் ஸ்ரீஅன்னையின் சக்தியை வெறும் தியானம், படித்தல், சத்சங்கம், சரணம், பூஜித்தல், அர்ப்பணித்தல் மட்டுமின்றி இயக்கப்படைப்பாற்றலும் வேண்டும்.

மே 15 உண்மையாக ஸ்ரீஅன்னையை அகத்தில் கண்டவர் வழி நேரானது. கோணலை இனி நோக்கார்.

மே 16 அகந்தையற்ற ஸ்ரீஅன்னைப்பணிக்கே உயிர்வாழ்வோர் உண்மை உணர்வினில் துரிதவளர்ச்சியாம்.

மே 17 கீழ்த்தரப் பேச்சு, நடத்தை, செயல் நீக்கியவருக்கு உண்மையான வலிமையும் பாதுகாப்பும் ஸ்ரீஅன்னை அகத்தே அருள்கிறார். புண்படுத்தாதது புனிதமே.

மே 18 தன்னை உயர்வாகக் காட்டுவது சிறிய உணர்வே. தவிர்த்தவர் தரணி தங்க உணர்வாகிட ஸ்ரீஅன்னை பணியாற்றுவர்.

மே 19 நமது ஜீவனுள் இயங்குபவை உறங்குபவைகளை ஸ்ரீஅன்னைக்கு ஒப்புவித்து நிவேதித்து சுத்தம் செய்ய அனுமதித்து வேண்டாதவை வெளியேற்றி இருளற்ற இறைவெற்றி ஆவோம்.

மே 20 வெளி நிகழ்ச்சி வருத்தம் விடுத்து அகவெழுச்சி ஸ்ரீஅன்னையுள் நிலைத்து புத்துலகினைக் கண்டு, மகிழ்ந்து வாழ்வோம்.

மே 21 மேல் மன உண்மையில் வாழ்ந்து தேறியவர்களே, ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னையின் அதிமன உயர்வுக்குள்ளாவர்.

மே 22 உலக பரிணா சக்தியுடைய தாமரைகள் ஸ்ரீஅரவிந்த மிராக்களின் உணர்வுகளே.

மே 23 ஸ்ரீஅரவிந்தமிராவின் மெய்வேட்கையால் உந்தப்படுவோர் அதி தீவிர சக்தி தேட்டத்தோடு ஆத்ம பயிற்சி புரியும் எந்த இடமும் ஆசிரமமுமே.

மே 24 சைத்திய புருஷ வளர்ச்சியே ஸ்ரீஅன்னை யிடம் நெருங்கியதன் உண்மை அளவுகோல்.

மே 25 உலகம் இதுவரை காணா அதிசியம் ஸ்ரீஅரவிந்தரின் உடலில் அதிமன சக்தி ஒளி பிரகாசித்ததே. ஐந்தாவது நாளே அடக்கம். அதிமன உடலே உலகின் உச்சம்.

மே 26 ஸ்ரீஅரவிந்த மிராக்கள் படைத்த நூல்களில் ஒளி, உணர்வு, ஆனந்தம், மெய்யறிவு ஞானம் அருள் பொழிவதை ஆழ்ந்து படிப்போர் அறிவர்.

மே 27 ஸ்ரீஅரவிந்தரின் பூரணயோக சாதனையின் அனைத்துச் சாரத்தையும் 'ஸ்ரீஅன்னை' என்ற நூலில் அடக்கி வழிகாட்டியுள்ளார்

மே 28 ஸ்ரீஅன்னை, தியானமும் பிரார்த்தனையில் ஸ்ரீஅரவிந்தரின் சாவித்திரையை வெளிப் படுத்தியது அனுபவ கொடையன்றோ உலகிற்கு.

மே 29 நமது இச்சா சக்தி ஸ்ரீஅன்னையின் சித்தத்தை ஈடேற்றுவதாக அமையட்டும்

மே 30 அழியும் அலைகளில் சிக்காது ஸ்ரீஅன்னை சூட்சம சரீரத்தில் நம்மை காத்து அருள்கிறார். பிணி, பிசாசு, தீண்டாது.

மே 31 இறையன்பினை அறிய சைத்திய புருஷனைக் கண்டுபிடிக்க ஸ்ரீஅன்னையே அருள வேண்டும்.

ஜுன் 1 ஏன் பிறந்தோம்? எதாக உள்ளோம்? எப்படி ஆக வேண்டும்? என்பதை ஸ்ரீஅன்னையிடம் சரணடைந்து விடைகாண்.

ஜுன் 2 வார்த்தைக்கெட்டா அனுபவத்தை ஸ்ரீஅன்னையே உணர்விக்கிறார். அகஜோதி ஆகுக.

ஜுன் 3 மனம், இதயம், உண்மை பிராணன் கீழ் பிராணன், சட உணர்வுவரை ஸ்ரீஅன்னை திறவாக்கி பூர்த்தி செய்திட பணிவான நன்றியுடனிருப்போமாக.

ஜுன் 4 உள்மனம், உள்பிராணன், உள் உடல் ஆகியவை ஜீவனின் எல்லாவற்றிற்கும் ஆழத்திலுள்ள சைத்திய ஸ்ரீஅன்னையை நோக்கித் திறப்பது உள்நோக்கிய திறவாம்.

ஜுன் 5 நாம் ஸ்ரீஅன்னையுடன் உள்உணர்வோடு எப்போதும் ஆகி உடல், மன, பிராண, இரத்த ஓட்டத்தில், மூச்சுக்காற்றிலும், உடலின் கண்ணறைகளிலும் ஸ்ரீஅன்னையின் ஒளி, அருள், ஆனந்தம், அமைதி பாய்வதை அனுபவிக்கலாம்.

ஜுன் 6 தூய்மையின் அளவே சைத்திய திறவுகோலாம் ஸ்ரீஅன்னையின் நினைவே வாழா, மாளா மார்க்கமாம்.

ஜுன் 7 எதிர்பிலா இணக்கமான ஆர்வமுடைய இருக்கை ஸ்ரீஅன்னைக்கு திறவாகி சக்தி வேலை செய்ய இணங்குமாம். நெகிழ்வாகிடுவோம்.

ஜூன் 8 ஸ்ரீஅரவிந்த யோகம் பயில ஸ்ரீஅன்னை மீது எப்போதும் அன்பாய், பக்தியாய், சரணமாய், சைத்திய திறவாகிடுவோம்.

ஜூன் 9 நம் வாழ்வின் நிலையான சந்தோஷத்தின், மகிழ்வின், நிறைவின், நிம்மதியின் உற்சாகத்தின் உழைப்பின் உண்மையின் ஊற்றே ஸ்ரீஅன்னையின் அருள் பாதங்களேயாம்.

ஜூன் 10 ஸ்ரீஅன்னையை பூஜிப்போருக்கு நுண்ணிய உணர்வுநிலையுண்டாக்கி ஸ்ரீஅரவிந்த யோக நெருக்கத்தை உண்டாக்கும் தொண்டு சூழலை அமைக்கிறார்.

ஜூன் 11 மரணத்தை தேவையற்றதாக்கிட இயற்கை முறையை மாற்றிய வள்ளலார் அதிமன ஒளி இறக்கத்தை ஆட்கொண்டதாம். அத்தகை வல்லோர்கள் ஸ்ரீஅரவிந்த சக்தியை ஏற்க அவனியில் ஸ்ரீஅன்னையின் கருவியாகி உருவாக வேண்டும்.

ஜூன் 12 உண்மையான உணர்வுள்ள ஸ்ரீஅன்னையின் குழந்தைக்கு அகங்காரம் ஏற்படுவதில்லை.

ஜூன் 13 சக்தியை வீணடிக்கும் பேச்சைவிட உள்நோக்கு அமைதி, ஞானத்தோடு ஸ்ரீஅன்னையின் செல்வாக்கை, மெய்வாக்கை, பெரிய சக்தியைப் பெறுதல் சாலச் சிறந்ததாம்.

ஜூன் 14 இனிய ஸ்ரீஅன்னையே உலக மக்களுக்கு உடலில் ஆரோக்கியம், மனத்தில் அமைதி, இதயத்தில் நல்லெண்ணம் நிலவிட தங்களின் ஆன்மீகம் அருள்வது வரப்பிரசாதமன்றோ.

ஜூன் 15 நிரந்தரமில்லா இப்புவிப்பரிணமிப்பில் சைத்திய புருஷனே நிரந்தமென

உணரவைத்த ஸ்ரீஅன்னையே நீரே இப்புவிக்கு கதியன்றோ.

ஜூன் 16 ஆசையைவென்று தங்களுக்கு அர்ப்பண மானவருக்கு அன்பும், பாதுகாப்பும் அளிக்கும் இனிய தாயே! ஸ்ரீஅன்னையே உம்மை துதிக்கிறோம் நித்தமும்.

ஜூன் 17 உண்மையை வாழ்வாக்கியவருக்கு பரம சத்திய உருஅருளும் ஸ்ரீஅன்னையே உமது தாழ்பணிகிறோம்.

ஜூன் 18 உலகில் எந்த உறவையும் விட ஸ்ரீஅன்னைமீது அன்பு செலுத்துவோருக்கு சைத்தியவாழ்வாம். அகங்கார உறவும் அவ்விதமாகிடுமாம்.

ஜூன் 19 உண்மையை பொய்யாகவும், பொய்மையை உண்மையாகவும் காணா கனல் ஸ்ரீஅன்னையால் சைத்திய திறவானோருக்கு உண்டு. சரணடை. தெளிவாய்.

ஜூன் 20 ஸ்ரீஅன்னையைப்பற்றி மட்டுமே எண்ணிடு வோர் இடறுவறோ? இனிய வாழ்வேயாம்.

ஜூன் 21 அனைத்திலும் ஸ்ரீஅன்னையைக் காண்போரே உண்மை ஆன்மீகவாதி, அகங்கார அழுக்கற்றோராம்.

ஜூன் 22 உண்மையான உண்மையே ஸ்ரீஅன்னை. அவளுள்ளாக்கிடு உன்னை. உண்மை செயலே இதுவாம், மற்றது வீணே.

ஜூன் 23 உணர்வுப்படியில் மேலேறுபவர் துரித வளர்ச்சியுடையோறாம். இருபத்திஒன்றாம் நூற்றாண்டே இப்புவியின் புதுபரிணமிப் பாகலாம். ஸ்ரீஅன்னை பிறந்த தேதி 21 அன்றோ. ஸ்ரீஅன்னை நூற்றாண்டு.

ஜூன் 24 ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னையின் நூல்களில் விளக்கியுள்ள நிபந்தனைகளை பூர்த்திசெய்பவரே பூரணயோகி.

ஜூன் 25 இயற்கை குரங்கிலிருந்து சுமார் 10 லட்சம் ஆண்டில் மனிதனை பரிணாமம் செய்ததாம். பிற தெய்வ சக்திகள் நூறாண்டு வேலையை ஸ்ரீஅன்னை மகாகாளி ஒரே நாளில் முடிக்கிறாறாம். ஆனால் சைத்திய ஸ்ரீஅன்னையோ, ஸ்ரீஅரவிந்த அதிமனிதனை மனித சமுதாய நேர்மைபொறுத்து துரிதமாக்கலாம்.

ஜூன் 26 அச்சமில்லா அமர நிலையாகியவர் ஸ்ரீஅன்னையின் அக ஆணைப்படி அனைத்தையும் வெல்கிறார்கள்.

ஜூன் 27 ஸ்ரீஅன்னையுள் வாழ்பவர் எவ்வாறு வாழினும், எப்பணியாற்றினும் இழிவில்லை. உணர்வே உயர்வுமில்லை சமத்துவம்.

ஜூன் 28 ஜீவ பாகங்களாகிய உடல் மன, பிராணன், அறிவு, புலனுணர்வுகளனைத்தும் ஸ்ரீஅன்னையுணர்வாவதே சைத்தியத் திருவுமாற்றமாம்.

ஜூன் 29 ஜீவனில் சில பாகங்கள் பிராணனில் சில அம்சங்கள் நமது உண்மையை சிதைப்பதைக்கண்டு ஸ்ரீஅன்னையின் ஒளியால் அழி அல்லது திருஉருசெய். திமிரவிடாதே. தீர்வுகண்டிடுக. தீப்பிழம் பாகிடுக. திவ்வியமாற்ற ஆன்மத்தீரரே! நீரன்றோ தூய சைத்திய புருஷறன்றோ. ஆன்மசித்தியன்றோ!

ஜூன் 30 வெள்ளமென பாயும் ஸ்ரீஅன்னையின் பேரொளி நிலைகொள்ள மன, பிராண, உடல் உணர்வினைத்திற, நெகிழ்வாகுக. ஏற்கும் திறம் பெறுக. திவ்வியமே

ஜூலை 1 நிலைத்த அமைதியான உணர்வால் ஸ்ரீஅன்னைமீது ஒருமுனைப்பட்டு கிரகித்து தனதுண்மையானவர் உறக்கத்திலும்

ஓய்விழா உழைப்பிலும் தாழாதார். தங்கத் தரணிக்கு அங்கங்களாம்.

ஜூலை 2 ஸ்ரீஅரவிந்த மிராக்களின் உடலிலிருந்து மகாசக்தி பரமசித்சக்தி வெடித்தெழுவதை புதிய யோகசக்தியால் கிரகிக்கும் உணர்வுக்குழந்தைகள் பாக்கியசாலிகளே.

ஜூலை 3 அமைதிபெற்ற இதயமே. கலங்காதே. பேரறிவே ஸ்ரீஅன்னையின் மெய்காட்சியைக் காண்பது நீவிரன்றோ.

ஜூலை 4 ஸ்ரீஅரவிந்த ஆசிரமும் ஆரோவில்லும் ஸ்ரீஅன்னையின் சிருஷ்டியானதால் முழுக்க அங்கு 'அவரின்' அருளே வெளிப்பாடாம்.

ஜூலை 5 இச் சிற்றுணர்வு மாந்தனை மகத்தான பேருணர்வு, பிரபஞ்ச உணர்வாக்கிடும் உன்னத உயரிய ஸ்ரீஅன்னையே நமஹ

ஜூலை 6 பூரண நம்பிக்கையுடையவர்கள் ஸ்ரீஅன்னையின் அக்னிப்பரிட்சையில் தேறியோர்கள் புடமிடும் தங்கம் பொலிவுறும். சொக்கத்தங்கமே உரசப்படும். வைரமே செதுக்கப்படும். அயறாதே 'அவளின்' பாதத்தை இறுகப்பற்றிக்கொள். பகைகள் வீழும். பயன்கள் கூடும்.

ஜூலை 7 எம் இதய ஸ்ரீஅன்னையே இயக்க சக்தியே, 'ஈர்க்கும் அன்பே! பிரிதல் துயரே! வகை தெரியா இவ்வெளிய நெஞ்சங்களை ஏற்றருள இளகி உருகுகிறோம். உமது கரமே எமது சிரம். தாழ்கிறோம். தளிரவைப்பீர். தவழச்செய்வீர். தவிப்பை தவிர்பீர். தங்களின் மலர்பாதத்தில் என்றும் எமது முத்தங்கள்.

ஜூலை 8 சகிப்புத்தன்மையும், பொறுமையும் நேர்மையும் கணக்கற்ற அடிகளைக்கரைத்து

கனலாகிட ஸ்ரீஅன்னை அதிமன உண்மையை அருள்கிறார்.

ஜூலை 9 மிகச் சிறந்த ஸ்ரீஅன்னையின் குழந்தையால் கோழைகளையும் முரடர்களையும் தொண்டராக்க முடியும்.

ஜூலை 10 அகத்தில் ஸ்ரீஅன்னை எனும் திறவுகோலைக் கொண்டோரிடம் அசுர, பகை சக்திகளின் தந்திரம் பலிக்காது.

ஜூலை 11 ஸ்ரீஅன்னையிடம் சாந்நித்தியத்தைக் கண்டவர்கள் தெய்வ காதலர்கள், அகங்கார மற்ற அந்தராத்மாவில் வாழ்பவர்கள்.

ஜூலை 12 தன்னுள் ஸ்ரீஅன்னையைக் காண்பவர்கள் இயற்கையிலிருந்து இருள் பொய்மை, அஞ்சாமை, துன்பம் அகன்று 'வைகறை' தோன்றும்.

ஜூலை 13 ஸ்ரீஅன்னையை வெளிப்படுத்தா அணுவோ, பிரபஞ்சமோ, அண்டமோ, அதிமன அருளைப் பெறுவதில்லையாம்.

ஜூலை 14 நெய்யும், தாமரைத் திரியும் வெள்ளிவிளக்கில் காற்றைத் தவிர்க்க கண்ணாடியும் தேவைபோல், ஸ்ரீஅன்னையை நித்தமும் ஜீவனுள் காணதெளிவாய், உணர்வாய், சக்தியாய், பாதுகாப்பாயிருத்தல் சுடறாம். நித்தியமாய் நிலைபெறுவாளாம்.

ஜூலை 15 நம் அந்தராத்ம ஸ்ரீஅன்னையை யாறாலும் வெட்டவோ, பிளக்கவோ, துளைக்கவோ எரிக்கவோ முடியாதாம். அசைவிலா பிரசன்னம் நிறைவே அலாதி.

ஜூலை 16 உயிர்களிடத்திலுள்ள ஸ்ரீஅன்னையையும், எல்லா உயிர்களையும் ஸ்ரீஅன்னையுள்காண்பதால் அச்சம், துன்பம், சாவு, அணுகாது.

ஜூலை 17 அடுத்தடுத்த இரு இதயத்துடிப்பிற்கு இடையில் இனிய ஸ்ரீஅன்னைஐய நினைத்திடும் ஆற்றலை அருள ஸ்ரீஅரவிந்தரை வேண்டுகிறோம். தாயே.

ஜூலை 18 ஸ்ரீஅரவிந்த் கண்ட அதிமனசூரியன் முன்பு இப்புறச்சூரியன் அமாவாசை இருட்டைப் போலத் தென்படுமாம். ஸ்ரீஅன்னையின் சைத்திய உணர்வானாலே உணரக்கூடுமாம்.

ஜூலை 19 இயற்கையின் பரிணாம வேகத்தைவிட ஒருபடி முன்னே செல்லத் துணியும் ஸ்ரீஅன்னையின் குழந்தை எப்போதும் நேர்மையான நிவேதனம் விசுவாசம், அடக்கம், நன்றி, உண்மை ஆர்வமுடையவறா வர். தாமஸ, ராஜசீகமற்றவராம்.

ஜூலை 20 சைத்தியக்கண்டுபிடிப்பால் எல்லா தளைகளையும் கடக்கும் பட்சத்தில் சாத்வீக குணத்தையும் விடுத்து ஸ்ரீஅன்னையின் உணர்வாகிட வேண்டிய திருக்கலாம். சைத்திய உணர்வே முழு பாதுகாப்பாகலாம்.

ஜூலை 21 ஆன்மாவை அரிக்கும் சந்தேக விஷம் ஸ்ரீஅன்னையை முழு உள்ளத்தோடு நம்பியவருக்கு ஏற்படுவதில்லை.

ஜூலை 22 நமது இலக்கை அடையும் வழி குறுகிட ஸ்ரீஅன்னையின் கருணைத் திறத்தை உணர்ந்து நன்றி செலுத்தும் தீவிரத்தை பொறுத்ததாம்.

ஜூலை 23 சைவ உணவு மாமிச உணவின் இடையூரைத் தவிர்ப்பது. புலனடக்கம் சைவத்தால் மட்டுமல்ல. ஸ்ரீஅன்னையின் கருவியான சைத்திய புருஷனால் முழுமையாம்.

ஜூலை 24 வள்ளலார் சைவமே உலகாகிட கூறுகிறார். ஆனால் ஸ்ரீஅரவிந்தர் தனிமனித ஒழுங்காகலாம் மனித சமுதாய ஒழுங்காக

திணிக்கக்கூடாது என்கிறார். இனிய ஸ்ரீஅன்னையே உண்மைத் தெளிவினை அருளுகிறார். உகந்ததே உணர்வாகிடுக.

ஜூலை 25 தன்னுள் ஸ்ரீஅன்னையை ஏற்றஉணர்வு உண்மையானவர் தரணியைத் தேற்றுவர். உள்ளுலகை உய்விப்பவர்.

ஜூலை 26 அகங்கார குருடர்களால் குவலயத்திற்குக் குழப்பமே. அமைதி அவனியாகிட அனைவரும் ஸ்ரீஅன்னையிடம் பிரார்த்திப் போம். ஆன்மத் தீர்வாவோம். தன் ஒழுங்கே தரணிக்கு வளமாம் நலமாம்.

ஜூலை 27 அந்தராத்ம ஸ்ரீஅன்னையாலே ஸ்ரீஅரவிந்தரின் அதிமனக் காட்சியாம், சித்திக்க சிரத்தை கூர்மையான சீர்பெற வேண்டும். பூரண சரணமே ஓங்குக. விலங்கு தன்மையே விலகிடுக.

ஜூலை 28 ஸ்ரீஅன்னையின் யோகசாதகர்கள் புற சந்தர்ப்பங்களை விட ஆன்ம சூழலை, ஆன்மகாற்றை முன்னேற்ற சாதக நிலையை உண்டாக்கி வாழ்கிறார்கள். ததாஸ்து.

ஜூலை 29 ஸ்ரீஅன்னை உள் உணர்வை மோனமாக்கி உணர்வின் உண்மைச் செயல்கள், அறிதல்கள், இச்சாசக்தி, உணர்ச்சிகளில் தமது வேலையை அருளி ஈடேற்றுகிறார்.

ஜூலை 30 தோல்வியை, நோயை ஸ்ரீஅன்னையின் இச்சை சரியென ஏற்காது. காரணத்தைக் கண்டு களைந்தெறிக. உடல், மன, பிராண குறையே. திறனாக்குக. சைத்திய ஆளுகையால் அமைதியுறட்டும்.

ஜூலை 31 சைத்திய ஸ்ரீஅன்னையால் உடல், மன, பிராணனுக்கும், ஆர்வம், நம்பிக்கை, சரணம், நேர்மையையூட்டி உயர்வாக்கிட சைத்திய புருஷன் முன்னுக்காகிடுமாம்.

ஆகஸ்ட் 1 தீய அற்ப மேற்போக்கான மந்திர சக்தி பிரயோகம் ஸ்ரீஅன்னையின் உண்மை சித் சக்தியை ஒன்றும் செய்யமுடியாது. அது அவர்களுக்கே திரும்பி விடுமாம். கலங்கத் தேவையில்லை. அச்சம் தவிர்க்க. துச்சமே

ஆகஸ்ட் 2 ஸ்ரீஅன்னையை நினைத்து ஆர்வமுற இயற்கை பகுதியின் இருளும் உணர்வின்மையும் அகன்றிடுமாம்.

ஆகஸ்ட் 3 ஸ்ரீஅன்னையின் உயர் உணர்வு ஆன்ம பலத்துடனிருக்கும் பக்த, சாதக, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, தேவை பூர்த்தி, ஆரோக்கியம் ... போன்றவை கேட்காமலே கிட்டுகிறதாம்.

ஆகஸ்ட் 4 உடலணுக்களிலும் ஸ்ரீஅன்னையை ஒருமுனைப்போடு ஏற்கச்செய்வதே உண்மையான நேர்மை. நம்மை நாமே ஏமாற்றக்கூடாது.

ஆகஸ்ட் 5 எடுத்த எடுப்பிலேயே, முதன்முதலாக உடனடியாக ஸ்ரீஅன்னைமீது ஏற்பட்ட பக்தி, அன்பு, பிறவற்றைவிட பிரதானமாயின் அருள்மழை பொழியும் வசந்தமே வாழ்நாள் முழுவதும்.

ஆகஸ்ட் 6 இருள், இடைஞ்சல், இன்னல், மந்தம், சச்சரவு, தடைகள், விரோதம், குரோதம் போன்ற தீயவை ஸ்ரீஅன்னை அவதரித்தபின் குறையும்பணியே ஈடேறுகிறது. அசுரனுக்கு அழிவே.

ஆகஸ்ட் 7 ஸ்ரீஅன்னையின் உயர்விதி ஆணைக்குட்பட்டு நடக்கும் இருளும் பொன்னொளி ஆகிடுமாம்.

ஆகஸ்ட் 8 தனிஉயிரணு இறவாமை, மாத்திருமந்திர் ஸ்படிகம் போல் உணர்வாகி, ஒளியாகி

ஸ்ரீஅன்னையை மையத்தில் கண்டால் காலன் என்னசெய்ய முடியும்?

ஆகஸ்ட் 9 ஸ்ரீஅன்னைக்கு பூரண சரணாகதியானோரின் வாழ்வு இறைமையாம், இனிமையாம்.

ஆகஸ்ட் 10 நோயை, சாவைத் தவிர்க்க ரசவாதத்தைவிட உடலணுவிலுள்ள உணர்வை சக்தியை ஸ்ரீஅன்னை அருளும், அன்புமாக ஆன்மாவிற்கு ஊட்டுகிறார். அமரமே.

ஆகஸ்ட் 11 சமர்ப்பணம் திரைநீக்கி ஸ்ரீஅன்னையை அக ஆழத்தில் காணச்செய்து, தவறு, தடைகளைத் தகர்க்கிறது.

ஆகஸ்ட் 12 ஸ்ரீஅன்னையே நம் வாழ்வை உயர்த்துகிறார். ஆற்றல் மிகு அன்பைப் பொழிகிறார். இருளகற்றி அனுபவச் செறிவை அருள்கிறார். அச்சமிலா ஆனந்தமே, மாயை அகற்றி மகத்துவமே.

ஆகஸ்ட் 13 வருங்கால வலிமை மிகுதிக்கேற்றப, தேவையற்றதை நொறுக்கிடும் பரிணாமத்திற் கேற்ப நம் ஸ்ரீஅன்னையே வழிநடத்தி ஆற்றலை ஆளுமையை அருளி ஆனந்தத்தை ஊட்டி ஊக்குவிக்கிறார். நாம் 'அவளின்' குழந்தைகளன்றோ.

ஆகஸ்ட் 14 ஸ்ரீஅரவிந்தரின் அதிமனம் வெளிப்படவே நமது வாழ்வு, மூச்சு, செயல் எல்லாம் ஸ்ரீஅன்னையின் உடமையாகி உண்மைக்காக உழைத்திடுவோம்.

ஆகஸ்ட் 15 தரிசன நாள் ஸ்ரீஅரவிந்தரின் பிறந்தநாளான இன்று பிற எவ்வித சக்திக்குமின்றி ஸ்ரீஅன்னைக்கே நம்முள் ஏதும் மிஞ்சாமல் எல்லாம் உரியதாகட்டும்.

ஆகஸ்ட் 16 மோனநிலையில் ஆழ்ந்து அமைதியுற ஸ்ரீஅன்னையின் அருள் நிலவும் சூழல்

ஏற்படுத்தும் உயர் அனுபவங்கள், ஆழ்நிலை தியானமாகலாம்.

ஆகஸ்ட் 17 ஸ்ரீஅன்னையின் பேரொளி நம்முள் நிலைத்து நின்று பிரகாசத்தையும், ஞானத்தையும் கொண்டுவந்தால் அனுபூதியாம்.

ஆகஸ்ட் 18 ஆன்மீக பொருளுடை கனவு அனுபவம் அதை உணருதல் ஞானம். காட்சிகள் சூட்சும சட, பிராண, மன, சைத்திய உலகிலிருந்து வருபவை. அனுபவம் ஆத்மீக உலகிலிருந்தாம். ஸ்ரீஅன்னையின் குழந்தை களுக்கு எல்லா நிலையும் எளிதாய் கிட்டுமாம்.

ஆகஸ்ட் 19 வேதாந்த சத் உண்மையும், சாக்த தாந்திரீக சித்சக்தி உண்மையும் ஒன்றானால் பொருள்களின் பூரண ஞானமாகிறது. ஆனால் வாழ்வனைத்தையும் யோகமாக்கி வழிகாட்டிய ஸ்ரீஅன்னை அதிமன ஞானத்தையும் அருள்கிறார்.

ஆகஸ்ட் 20 ஸ்ரீஅன்னையை வணங்குவதால் ஏற்படும் ஆன்ம ஆர்வத்திற்குப்பின் நிற்கும் விஸ்வ ஆற்றல் நம்முள் பாய்ந்து நம்மை அதிமன சமுதாய இனமாகிட உருவாக்குகிறது. ஓம் மிர்ராய நமஹ.

ஆகஸ்ட் 21 கர்மம், பக்தி, ஞானம் மூன்றும் ஒன்றானதே ஸ்ரீஅரவிந்தயோகம். ஸ்ரீஅன்னையே சித்தப்படி இயக்கி பூரணத்துவமாக்குகிறார். சரணடைவதே நம்பணி.

ஆகஸ்ட் 22 ஒளி பொருந்திய சூரியன்களும் ஸ்ரீஅன்னையின் சக்திக்கு ஈடில்லை எனில் நம்பியவருக்கு இனி ஒருபோதும் கேடில்லை.

ஆகஸ்ட் 23 ஸ்ரீஅன்னையுடன் அக ஆன்மத் தொடர்பால் பிரசன்னம் மன, பிராண, உடலிலும் கண்டு வாழ்வாங்கு வாழுதல்.

ஆகஸ்ட் 24 நாம் அடையும் உயரிய ஆன்ம சித்தியும் நமக்கல்ல, ஸ்ரீஅன்னைக்கே ஆக்கி மகிழ்வோம்.

ஆகஸ்ட் 25 ஸ்ரீஅன்னையை நேரில் காணாதவரும், ஆசிரம, ஆரோவில் வரவாய்ப்பில்லாதவர்களும் உள்ளத்தின் பக்தி திரத்தால் 'அவளிடம்' மிக மிக நெருங்கியவர்கள் உலகில் ஏராளம். அருட்காட்சியாம்.

ஆகஸ்ட் 26 ஸ்ரீஅன்னையிடம் அன்பாய், நம்பிக்கையய், முழுச்சரணமாயிருப்பவரின் நெருக்கத்திற்கு ஈடாமோ?

ஆகஸ்ட் 27 உடலும் உருமாறிட தமது சைத்திய புருஷன் மூலம் ஸ்ரீஅன்னையுடன் தொடர்புறுதல் அவசியம் மன, பிராண தொடர்புகள் போதாது.

ஆகஸ்ட் 28 சாதகர் ஸ்ரீஅன்னைக்கு பூரண திறவாகிறார். உணர்வை சைத்திய, ஆன்மீக மாற்றமாக்கிட ஆர்வமுறுகிறார்.

ஆகஸ்ட் 29 ஸ்ரீஅன்னையின் சைத்திய புருஷ உணர்வு நம்மை உடல் வாழ்விலிருந்து உயர்த்தி அமர நிலையாக்கி மரண பயத்தை நீக்குகிறது.

ஆகஸ்ட் 30 ஸ்ரீஅன்னையின் ஞானவீரர்கள் அச்சமறியா பரிபூரணன். ஒவ்வொரு அடியும், வினாடியும் இப்புவியில் இதுவரை நிலைப்பெற்றுள்ள தீயதை எதிர்த்திடும் போராளி. இறைவெற்றிக்கே ஆனவர். தனக்குள்ளேயும் போராடி இறவாமை இறையாண்மை ஆகிடுவர்.

ஆகஸ்ட் 31 தன்னை மாற்றியோர் ஸ்ரீஅன்னை வழியை நன்கு பயின்றோர். உள்மாற்றமே உலகிற்கு

உய்வாம். பிற தொய்வே. அவரவர் வழி அவருக்கு மட்டுமே. தனித்தனி பிரபஞ்சங்கள் ஸ்ரீஅரவிந்த யோகக்கூட்டு அங்கங்கள்.

செடம்பர் 1 ஸ்ரீஅரவிந்த யோக கூட்டு சக்திகளுடைய சாதகர்கள் பொதுத்தொண்டில் ஒருவரின் அபூர்ணம் முழுமை அமைப்பை குறைவாக்கிடும். ஆகவே ஸ்ரீஅன்னையிடம் நிவேதிக்கத் தொண்டு பழுதாகாது. நற்பலனளிக்கும். அவரையும் தேற்றியாக வேண்டும்.

செடம்பர் 2 தனது சொந்தத் தேவையும் பொருட் படுத்தாது, தன்னைச் சார்ந்த பெற்றோர், மனைவி, மக்களின் எதிர்காலத்தையும் நினைக்காது, விபத்தில் வலக்கரம் வீழ்ந்தும் ஸ்ரீஅன்னையின் தொண்டே மூச்சாயிருக்கும் அது போன்ற குழந்தைகளை என்னென்பது. புதிரே. பிரதிபலன் நோக்கா நோன்பு. நம்பிக்கை நலிவதில்லை. நல்வாழ்வேயாம்.

செப்டம்பர் 3 தனது சொந்தத் திறனால் வரும் வருவாயை (மற்றுமொரு தொழில்) இல்லிற்கு தறாது ஈட்டியதை முழுக்க ஸ்ரீஅரவிந்தரின் ரிலிக் மந்திர் கட்ட முனைந்தோரின் உயர்ந்த உள்ளத்திற்கு ஈடாமோ? ஸ்ரீஅன்னைக் குழந்தைகளின் சாதனைகள் சரித்திர படைப்பாமோ?

செப்டம்பர் 4 ஒரு நல்ல ஸ்ரீஅன்னையின் குழந்தை முடிவிலா புற தேவைகள் பூர்த்தியாகா எனும் நிலையறிந்து நிம்மதியுடன் குறை நிறையை சமமாக ஏற்று செயல்படுவர். ஆயினும் முறையுடன் முன்னேறுவர்.

செப்டம்பர் 5 ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னையின் நூல்களை பூரண பக்தியுடன் சைத்திய ஞானத்தோடு படிப்பவர் எடுத்துச் சொல்வதைக் கேட்டால்

உள்ளமே உண்மைத் தளமாகிறது. ஸ்ரீஅன்னை உணர்வே.

செப்டம்பர் 6 ஸ்ரீஅன்னையை சிக்கெனப்பிடித்த ஜீவன்கள் வாழ்வது ஒரு சாட்சியான காட்சி போன்றே. உணர்வே உயர்லோகத்திலாம். என்னே! அமைதி. அருள், அடக்கம், பணிவு, கனிவு, துணிவு, தெளிவு, செறிவு ... எல்லாம்.

செப்டம்பர் 7 உண்மை அன்பும், நட்பும் வயது வரம்பற்றது. ஸ்ரீஅன்னையிடம் உறவு உன்னதமானது. புனிதத்தன்மைவாய்ந்த நெஞ்சங்கள் பூர்வஜென்ம ஆத்ம தொடர்பாயிருக்கலாம். பிளக்கவோ, பிரிக்கவோ முடியாது. காலங்கடந்த ஐக்கிய ஒருமையுணர்வு. கருமை நெஞ்சங்களால் சிறுமையாகாது. பெருமித பெருமையாம். அவர்களின் பொறுமை.

செப்டம்பர் 8 கல்லாதவரின் உள்ளத்திலும் கனலேறிய ஸ்ரீஅன்னை ஒளி பிரகாசிக்கிறது. இதயமே சாகா கல்விமான். உண்மையின் ஆசானே சைத்தியபுருஷன். புறக்கல்வி புழுதி போக்கி. அகக்கல்வியே அமரத்துவம்.

செப்டம்பர் 9 ஸ்ரீஅன்னையிடம் வரவிழையும் உண்மை ஆன்மாக்கள் அவனியில் ஒருவித கூட்டுச் சக்தியிடம் சிக்கித் தவிக்கின்றன. வேட்டு வைத்து சிதறடித்து சிறகடித்து பறந்திட பயமின்றி பாய்ந்தெழுவோர் ஸ்ரீஅன்னையை அங்கேயே தொழுவர். துப்புரவுப் படுத்தி தூங்கா விளக்கேற்றுவர். எங்கும் இனிய ஸ்ரீஅன்னையே. விடியலே.

செப்டம்பர் 10 சிலருக்கு அந்தரங்க வேட்கை தீராது. அசிங்கமாயுமுள்ளது, அச்சமாயுமுள்ளது. அந்தராத்மாவினுள் ஸ்ரீஅன்னையின் மலர்பாதங்கண்டு இரண்டில் எது போரிட்டு வெல்கிறதோ முடிவை விட்டுவிடு. முயற்சி இருபக்கமும் பாரபட்சமற்றதாகட்டும். சுபமே

செப்டம்பர் 11 சித் சக்தியுடைய ஸ்ரீஅன்னையின் குழந்தைகள் எங்கிருப்பினும் துரிததமாகக் கூடி மலர்த்தொண்டாற்றி மகத்துவம் பெற்றிடும் மகிமையே அலாதி. அருள் உணர்வாம், பொருள் புரிந்தோர், தெய்வீகப் புன்முறுவலே

செப்டம்பர் 12 ஸ்ரீஅன்னையை தனது சிரமாக்கிய அருளன்பர் ஆற்றிடும் தொண்டு காலத்தால் அழியா அமரத்துவம் வாய்ந்தது. பலருக்கும் பலனாம்.

செப்டம்பர் 13 கபடாய் ஸ்ரீஅன்னையின் பக்தர் போல் வேடமிட்டுத் தனது சுயநல குறுகிய இயக்கமாகி தோல்வியுற்று ஸ்ரீஅன்னையின் அருந்தொண்டிலும் சுரண்டிய விரோத சக்தியான வினோதம் வியப்பானது. அவருடன் வீணாக்கிய காலமும், சக்தியும் திரும்புமா? வஞ்சநெஞ்சமே திருந்திடுக.

செப்டம்பர் 14 விழலுக்கிறைத்த நீராய் வீணர்கட்கு ஸ்ரீஅன்னையின் சக்தியை வீணடித்து விரக்திக்குள்ளாகதே. விவேகியே யோகியாம். ஆனால் நல்ல உள்ளத்தை நாடிச்சென்று உணர்வாக்கிடுக.

செப்டம்பர் 15 ஸ்ரீஅன்னையின் தொண்டு ஸ்தாபனம் சிருஷ்டிப்பது பெரிதல்ல. அதன் பொறுப்பை ஏற்றோர் பொறாமையற்ற பொறுமையாயும்; ஆதார அடிப்படையை துரிதமாக செயல் படுத்துபவறாயும், ஸ்ரீஅன்னைக்கு நம்பிக்கைத் துரோக செயல் புரியாதவறாயும், தானே கடைசிஆள் எனும் பணிவு, அடக்கம், கட்டுப்பாடு, கனிவு, கருணை எல்லாம் வளர்க்க அங்கு இருப்பதாம்.

செப்டம்பர் 16 தயக்கமோ, தாமதமோ இல்லா அர்ப்பணம் பெரிய அற்புத அமர ஸ்தாபனத்தை உருவாக்கிட இடம், காலம், செல்வம் போன்ற

வாய்ப்பை ஸ்ரீஅன்னை அருள உதவியாகிறதாம். எதிர்பாராமல் நடக்காதது நடக்கிறாம். தடைகள் தளர்கிறது ஆன்ம செயலாற்றும் படைகள் குவிகிறது. ஸ்ரீஅரவிந்தப்பணி ஈடேறுகிறது.

செப்டம்பர் 17 ஸ்ரீஅன்னையின் ஸ்தாபனத்திற்கு தன்னிடத்தை அர்ப்பணித்தோருள் ஏற்படும் சைத்திய அனுபவ நிறைவே ஆசியாம்.

செப்டம்பர் 18 ஸ்ரீஅன்னை மீதான அன்பு அகத்திலா? புறத்திலா? ஆற்றும் தொண்டிலா? இருக்கும் உணர்விலா? ஏற்படும் மகிழ்விலா? அனுபவிப்போறே அறிவர்.

செப்டம்பர் 19 பலஆண்டு தன்னுள் உதித்த ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னையின் சாதனாபீடம், திடீரென ஏற்பட்டு சிரமமின்றி செவ்வனே ஈடேறி ஸ்ரீஅன்னையின் பிரசன்னம் அங்கு நிலைகொண்டது அனுபவமானது

செப்டம்பர் 20 நாம் எல்லோரும் ஸ்ரீஅன்னையின் குழந்தைகளே! நம்முள் வித்தியாச விதற்பம் ஏற்படுத்துவது இருள் சக்தியே! ஒன்றாவோம். ஓர் உணர்வாவோம். ஒளியாவோம்.

செப்டம்பர் 21 ஸ்ரீஅன்னையின் பூஜை அறையில் விதவித பூக்களை அழகுபடுத்தி ஊதுபத்தி ஏற்றுவதே (hobby) பொழுதுபோக்காய் கழிக்கின்ற காலமே நித்தியமானது. சத்திய சக்தி அங்கே சூழ்ந்துள்ளது. பல பக்தர்களுக்கு மிகுந்த பயனளிப்பது மகத்துவமே. அமைதி, தியானம் ஆற்றல்மிக்கதாம்.

செப்டம்பர் 22 உலகெங்கும் தியானக்கூடங்கள், ஸ்ரீஅன்னையின் பூஜை அறைகள், ஸ்ரீஅரவிந்த யோக நூலகங்கள், ரிலிக் மையங்கள், தரிசன நாள் நிகழ்ச்சிகள் எல்லாம் ஆசிரம, ஆரோவில்லைப் போலவே ஆங்காங்கு

அமைந்தவண்ணமுள்ளது. அவனியே ஸ்ரீஅன்னைக்கூடமோ? குழுமுகிறது.

செப்டம்பர் 23 அகில மக்களனைவரையும் ஸ்ரீஅரவிந்த ஆசிரமம், ஆரோவில்லில் காணும் போது பேதமின்றி அன்புமொழி இதய புன்முறுவலில் ஸ்ரீஅன்னைமுகமே அனைவருள்ளும் தெரிகிறது. என்னே! இனிமை புத்துலகு. புதிய சமுதாயம் சைத்திய அன்பு பரிணமிப்பு.

செப்டம்பர் 24 குடும்ப வாழ்விலுள்ளோரின் எல்லா உறவும் ஸ்ரீஅன்னையின் சைத்திய அன்பாய் மாறிட அதுவும் ஸ்ரீஅன்னை இல்லமே. உணர்வால் உயர துறவு துயறாகாது. அரசு, தனியார் அலுவலையும் ஸ்ரீஅன்னைத்தொண்டென செய்ய செழுமையே வாழ்வனைத்தும் யோகமே.

செப்டம்பர் 25 ஸ்ரீஅன்னையிடம் பக்தி, ஆர்வம், தூய்மை, நேர்மை, நம்பிக்கை, இசைவு, தொண்டு, பணிவு, கனிவு, ஒழுங்கு, சரணம், அன்பு, அழகு, உணர்வு, விலக்கல், அறிவு, ஆற்றல், அடக்கம் போன்ற நல்ல அம்சங்களை அர்ப்பணிக்க சைத்திய அதிமன அருளாட்சி ஏற்படுமாம்.

செப்டம்பர் 26 அக அந்தராத்ம சைத்திய உணர்வோடு ஸ்ரீஅன்னையின் பாதுகாப்பளிக்க விபத்தில் மரண தேவதை உயிரை எடுக்க முடிவதில்லை. முழுபாதுகாப்பே.

செப்டம்பர் 27 இவ்வுடலிருக்கும்போதே எவ்வளவு நெருங்கி ஸ்ரீஅன்னையிடம் ஐக்கியமாக ஒன்றித்து பூரண ஞானம் சக்தி பெற்று ஸ்ரீஅரவிந்த யோக அநுபூதியாகவேண்டும். தூல உடலே சாத்தியம். வெல்க. மனித பிரச்சனைக்கு தீர்வாம்.

செப்டம்பர் 28 நுண்ணுடலில் ஸ்ரீஅன்னையை சைத்திய ஒளியாக நிதர்சன தரிசனம் தீபம் போலக்காண அதில் அனைத்தையும் அர்ப்பணிக்க அக்னி விஸ்வக் கொழுந்தாக பெரிதாகி புறபிரபஞ்சமே மேல்நோக்கி எழுகிறதாம். திருஉருமாற்றமே.

செப்டம்பர் 29 ஸ்ரீஅன்னையின் சைத்திய ஆனந்தத்தால் உயிரணுக்கள் புத்துயிர் பெற்று அமரத்துவம் ஆகிட ஆர்வம், பக்தி சரணம் விஸ்வமாகட்டும், வீரிய சாதனை புரியட்டும். பின்பே குறையிலா உண்மை உணர்வாம்.

செப்டம்பர் 30 1946ல் இறங்கிய ஆனந்த சக்தி காற்றில் நீந்தி நெருங்கியவர்கள் பழைய சிறுவாழ்வை தொடறாதவர்கள். நாமும் பெருமுயற்சி செய்து உணர்வை மாற்றிட ஸ்ரீஅன்னையை வேண்டி தாழ்பணிவோம். நாம் அறியா நிலை எவ்வளவோ! மகா சக்தி ஸ்ரீஅன்னையே உமக்கு சரணம்.

அக்டோபர் 1 உண்மையான தீவிர ஆர்வம் ஸ்ரீஅன்னைமிருப்பின் எல்லா சந்தர்ப்ப சூழ்நிலைகளும் சாதகமே, பாதுகாப்பே, வெற்றியே.

அக்டோபர் 2 அந்தராத்மாவில் ஸ்ரீஅன்னை நிலைக் கொண்டு அக உணர்வு முழுக்க அவளின் அருட் சக்தியால் செயல்பட்டாலே புறமன இதயம், உயர்த்தும் உண்மை உணர்வாகுமாம். திரையிலா சைத்திய புருஷனே அருளாம்.

அக்டோபர் 3 ஸ்ரீஅரவிந்தரின் அதிமன அருள் ஸ்ரீஅன்னையால் அனுபவமானவரின் ஆழ்ந்த வாழ்வு, தனித்துவம், ஒளிமிகு இரகசிய ஆழம், உயரிய சிகரமாம் எதாலும் தீண்டமுடியாது.

அக்டோபர் 4 ஸ்ரீஅன்னையின் சைத்திய புருஷனில் எழும் நம்பிக்கையே உண்மையானது. எதாலும் குலையாதது. நித்தியமானது. ஸ்ரீஅரவிந்த யோகத்திற்கு உகந்தது.

அக்டோபர் 5 மெய்ப்பொருளின் விளக்கமே ஸ்ரீஅரவிந்தர். அவரின் சித்த நிறைவேற்றமே ஸ்ரீஅன்னையின் குழந்தைகள் தொண்டு. உண்மை விதிக்குள்ளாகி உறுதி பூணுவோம்.

அக்டோபர் 6 ஸ்ரீஅன்னையின் உண்மை குழந்தைகளின் ஜீவ வாழ்வு பிறருடன் ஆன்ம நெருக்கம் ஏற்பட்டு அவர்களின் மன, பிராண, ஸ்தூல ஜீவனை தனது போலக் காணும் ஆற்றலுண்டாம். அகஉறவே ஆன்மத் தெளிவே நிறைவே. பிற குறைவே.

அக்டோபர் 7 தனக்கோ, பிறருக்கோ, சமூகத்திற்கோ, நாட்டிற்கோ, மனித இனத்திற்கோ வாழ்வது அறைகுறையே ஸ்ரீஅன்னையுள் சைத்திய உண்மையில் வாழ்வதே முழுமை. அக உணர்வோடு புறமானால் அதுவும் இறைமையாகலாம். இருளற்ற அருளாட்சி யாம்.

அக்டோபர் 8 ஸ்ரீஅன்னையின் உயர் அம்ச சக்திகள் எல்லாம் 'அவளின்' பக்த, சாதக, குழந்தைகள் மூலம் இறங்கி நிலைபெற்று தூய்மைப்படுத்தி புனித பூமியாக புதுமனித சமுதாயத்தை உருவாக்குகிறது. உன்னதமே ஒளிறாம்.

அக்டோபர் 9 ஸ்ரீஅரவிந்த யோகமே இயற்கைப் பரிணாமத்தின் தலைமையாய் பேரொளி ஸ்ரீஅன்னையால் பெருமுன்னேற்றமே.

அக்டோபர் 10 முந்தையநாளைவிட இன்று உணர்வால் ஸ்ரீஅன்னை வழியில் முன்னேற்றமா? என்பதைக்கண்டு ஆர்வத்தை, ஆற்றலை அதிகரிக்கலாம்.

அக்டோபர் 11 ஸ்ரீஅன்னையை உணர்ந்தவருக்கோ அருள். அகந்தையானவருக்கோ இருள். பொருள் புரிந்தோறோ புகழுக்குரியவர்.

அக்டோபர் 12 ஸ்ரீஅன்னையிடமிருந்து வந்த ஜீவன்கள் பிரிந்து காரிருளில் வீழ்வதே துயறாம். உணர்வாயின் ஆனந்தமே.

அக்டோபர் 13 அசுர இதயமும் ஸ்ரீஅன்னையிடம் பரிணமிக்க ஆர்வமுறுகிறது. உயர்ந்தோ ருக்கு அது தீங்காகிறது. ஒளியானருக்கு ஆன்மீக மாகிறது.

அக்டோபர் 14 அஞ்ஞானமே ஸ்ரீஅன்னையாகு ஞானம் பெறுவாய். பொய்மையே பொன்னிற அதிமன ஸ்ரீஅன்னையைக்காண உண்மை யாவாய். பலவீனமே பக்தி திறத்தால் பதற்றமின்றி இனிய ஸ்ரீஅன்னையின் மலர்பாதத்தைத் தொழு சக்தி எழும். யுக்தி பெருகி முக்தியாவீர்கள்.

அக்டோபர் 15 ஸ்ரீஅன்னையின் குடும்பக்குழந்தகளாகிய நாம் பழைய மானிட முறை விடுத்து உறுதி, வலிமை, நம்பிக்கை, வெற்றி வாழ்வை பின்பற்றுவோம்.

அக்டோபர் 16 ஓ நேர்மையற்ற மனித இயல்பே! சிக்கலே! சீர்பெற ஸ்ரீஅன்னையுள் மையங்கொள். கொடூரம் குறையும். இறை இயல்பாகிடும்.

அக்டோபர் 17 சுயநலம் அஞ்ஞானம், அகங்காரம் பொய்மை, பலவீனம் நேர்மையின்மை அகற்றிடுக. ஸ்ரீஅன்னையின் சக்தியாம் குழந்தையாம் செம்மைப்படு, செழுமையுறு.

அக்டோபர் 18 புவி வாழ்வின் நிறைவே ஸ்ரீஅன்னையுள் வாழ்வதாம்.

அக்டோபர் 19 நம்முள் ஸ்ரீஅன்னையின் சாந்தி, ஒளி, சக்தி, உணர்வு, அருள், அமைதி, உண்மை,

விருத்தியாக்கி சம்பத்துகளைத் தாங்கும் திறனாவோம்.

அக்டோபர் 20 கோபம் பிரபஞ்ச அஞ்ஞான சக்தி ஸ்ரீஅன்னையுள்ளாவதைக் கெடுக்கிறது. சைத்திய புருஷனாவதை வெறுக்கிறது. வீறுகொள் அதனாளுகை அகலும். கீழானவை வீழும். அற்புதமே. அதிசய மாற்றமே.

அக்டோபர் 21 வள்ளலாரின் சிற்சபை இருபுருவமத்தியில் சூட்சும திருஷ்டி மைய ஒரு ஆதார சக்கரத்தில் ஒருமுனைபட மாத்துரு மந்திர் ஸ்படிக வடிவு பிரகாசம். அதனுள் ஸ்ரீஅன்னையை ஒளிவடிவில்காண சகஸ்தரதள இணைப்பாம். ஸ்ரீஅரவிந்த கோடிசூரிய பிரகாசமாம்.

அக்டோபர் 22 சைத்திய புருஷன் வளருவது, ஜீவாத்மா அப்படியேயிருக்கும். ஆத்மா இறைவனின் வாசம். அந்தராத்மா இறைவனின் நேரடி கூறு. சூட்சுமமோ, விஸ்வமோ ஸ்ரீஅன்னைக்குள்ளாவதே அனைத்திற்கும் மகிமையாம்.

அக்டோபர் 23 ஸ்ரீஅன்னைக்கு ஆற்றும் தொண்டால் கிட்டும் மகிழ்விற்கு ஈடுண்டோ? உண்மைத் தொண்டரே அறிவர்.

அக்டோபர் 24 சரணடைவதால் ஸ்ரீஅன்னையின் இறையம்சம் நம்முள் ஏற்படுகிறது.

அக்டோபர் 25 மனச்சாந்தியில்லாதவர்கள் உறங்குவதற்கு முன்னும் எழுவதற்கு முன்னும் உண்பதற்கு முன்னும் ஸ்ரீஅன்னையின் உருவையே நினைவுக்கூற நிம்மதி ஏற்படுகிறதாம். நிறைவாழ்வாம்.

அக்டோபர் 26 பழைய பரிணாமம் அஞ்ஞானமிக்கது. ஸ்ரீஅரவிந்தரின் அதிமனம் தலைகீழ் மாற்றம். மெய்ஞானம். புதிய உண்மை உலகு.

ஸ்ரீஅன்னையே அவசேதனத்துள்ளிருக்கும் அதிமனம் வெளிப்பட மேல்நிலை அதிமன உணர்வு, ஒளி சக்தியை நேரடியாக புவியினுள் பாய்ச்சுகிறார். அவளே அனைத்துலகையும் அரவணைக்கும்தாய்.

**அக்டோபர் 27** ஸ்ரீஅன்னை குழந்தைகளே ஸ்ரீஅரவிந்தரின் அதி உலகை நோக்கி மனித சமுதாயத்தைவிட முன்னதாக முன்னேறுவர். அருட்குழந்தை யாவது அவ்வளவு எளிதோ?

**அக்டோபர் 28** அற்புத ஆனந்த உலகில் வாழ ஸ்ரீஅன்னையிடம் எதைவேண்டுமானாலும் விடத்தயாறானால் கிட்டுவது எளிதாம்.

**அக்டோபர் 29** நமது செயல்கள் பூரண தெய்வீகமாக ஜீவனுள் ஆழ்ந்துள்ள உண்மையுள் ஸ்ரீஅன்னையைக்கண்டு வாழ்வதே.

**அக்டோபர் 30** இவ்வுலகில் மனித பிறவி ஓர் அரிய பெரிய வாய்ப்பு. அதிலும் ஸ்ரீஅன்னையின் மீது பக்தி ஏற்படின் எழுபிறப்பும், எப்பிறப்பும் ஏற்றமே. சைத்திய பிறப்பேயாம்.

**அக்டோபர் 31** நமது ஆன்மா, இயற்கை, சிந்தனை, செயல், உடல் அணு, வாழ்வு, மூச்சு, இதயத்துடிப்பு, அடிமனம், அவசேதனம் அனைத்தும் ஸ்ரீஅன்னைக்கே அர்ப்பணம்.

**நவம்பர் 1** சைத்திய புருஷனில் ஸ்ரீஅன்னையை நிரந்தர பிரசன்னமாக்கியோர் தன்னை, பிறரை, உலகை, கடவுளை, ஆன்மாவை, இயற்கையை எல்லாம் ஸ்ரீஅன்னையாகவே காண்பர், களிப்பர்.

**நவம்பர் 2** ஸ்ரீஅரவிந்த யோகம் தனிமனித முக்தி, எல்லா மனிதச்செயலில் சமநோக்கு, எல்லா உயிர்களின் நன்மை கருதுதல், ஸ்ரீஅன்னையிடம் ஆர்வம் அன்பு பூரண

ஆன்மீகம், பக்தி, ஞானம், செயலுடைய முழுமையான யோகமாம்.

நவம்பர் 3 ஸ்ரீஅன்னை அவதரித்தது அவனிமக்களின் துரித பரிணாமம் பூரண மாற்றம், இறை இனமாகி ஸ்ரீஅரவிந்த சித்தத்தை ஈடேற்றுவதேயாம்.

நவம்பர் 4 தயாறாயில்லா மனித இனத்தால் ரிக் வேத ரிஷிகள், அதிமன ஞானமிருந்தும் புதிய தெய்வீகத்தை படைக்க முயற்சிக்கவில்லை. ஸ்ரீஅரவிந்தஸ்ரீஅன்னையே அவனிக்காக, உண்மைக்காக உழைத்தார்கள். இறையன்பே. சைத்திய அன்பே. அதிமன அன்பின் பெருக்கே.

நவம்பர் 5 நமக்கு நல்ல காலம் பிறக்க வேண்டுமா? ஸ்ரீஅன்னையை எப்போதும் நினைக்கவும் சகலத்தை அர்ப்பணிக்கவும் செய்பவருக்கு எல்லாம் ஜெயமே. அக உறவே. அருட்கூடுமே.

நவம்பர் 6 ஸ்ரீஅரவிந்தஸ்ரீஅன்னைக்குரிய மந்திரங்களின் மகத்துவம் மனதில் கூறுவோருக்கு பயன் மிகப்பெரிதே.

நவம்பர் 7 தனக்குத்தானே தலைவனாகிட தன்னுள் இருக்கும் சைத்திய ஸ்ரீஅன்னையை முன்னுக்குக் கொண்டுவந்தால் அவளே உண்மை, குரு, கடவுளாம்.

நவம்பர் 8 ஓம் நமோ பகவதே. ஓம் ஆனந்தமாயி, சைதன்யமயி சத்தியமயிபரமே. மதர் ஸ்ரீஅரவிந்தாய; ஓம் ஸ்ரீஅரவிந்தமிராய ... போன்ற மந்திரங்கள் இன்னும் பல உண்டு பக்தியே ஆனந்த முக்தி.

நவம்பர் 9 தமது உள்ளிருக்கும் சைத்திய ஸ்ரீஅன்னை யின் குரலுக்கு செவிமடுப்போர் செம்பொன் ஏகுவது நிச்சயமாம்.

நவம்பர் 10 ஸ்ரீஅரவிந்த யோக சாதனையால் ஆன்மீக அனுபவம் ஏற்படுவது தாமரை மொக்கு மடல் விரிந்து மலர்ந்து அதனுள் ஸ்ரீஅன்னையின் பரமசாஸ்திரவேதம் புகட்டுவது. நம் சைத்திய புருஷனில் நிகழாதோ நம்பிக்கையே 'எல்லாம் செய்விக்கும்.

நவம்பர் 11 நமக்கு ஸ்ரீஅன்னைமீது பக்தி ஏற்படும் முன்பே ஸ்ரீஅன்னை நம்முள் உள்ள சைத்திய புருஷனுள் அன்பை அருளியதேயாம். இனி ஆத்மசித்தியே. விழிப்பானது. விரைவாகிடும்.

நவம்பர் 12 சில அபூர்வ அந்தராத்மாக்கள் இதய ஸ்ரீஅன்னையின் ஸ்பரிச சக்தியால் அஞ்ஞான மலர்ச்சியாம். புறவேறுசாஸ்திர, உயிரோடுள்ள குருவின் உதவியோ தேவையற்றதாகிறதாம். தனதுண்மை தனக்கே. தயை தரணிக்காம்.

நவம்பர் 13 பூரணயோகி ஸ்ரீஅரவிந்த ஞானமுடையோர் வாழ்வுமுழுவதும் அடர்ந்த காட்டினுள் புதுப்பாதையமைத்து ஸ்ரீஅன்னையின் சைத்திய புருஷனால் சுதந்திரமாக புவியை செப்பனிட்டு செல்பவராம். வரப்புயர நீர் உயரும், நிலம், குடி, கோன் உயருமாம்.

நவம்பர் 14 தன்னையாளும் ஆற்றல் சைத்திய புருஷனுக்கே. தரணியை யாராலும் முழுக்க ஆளமுடியாது. ஸ்ரீஅன்னையின் அதிமன வெளிப்பாடு முழுமைக்குப்பின்பே சைத்திய ஆட்சியாம்.

நவம்பர் 15 நாம் இறைவனை அடைந்தாலும் புவியை விலக்கத் தேவையில்லை. பரமனையே இங்கு பூரணமாக நிலைகொள்ள பூரணயோகம் மனித ஆன்மாவிற்கு முழு சுதந்திரமளித்து அந்தராத்மாவிலுள்ள சைத்திய ஸ்ரீஅன்னை யால் தனித்தனி வழியில் தங்க தரணியை உருவாக்குகிறார்களாம். ததாஸ்து.

நவம்பர் 16 நம்முள் அந்தராத்ம ஸ்ரீஅன்னை உள்ளது உறுதியானால் வஞ்ச நெஞ்சிற்கோ, பகைச் சக்திக்கோ பணியாதே. துணிவாகி வென்றிடு.

நவம்பர் 17 தரிசன நாள். ஸ்ரீஅன்னை உடலை விட்டது. ஸ்ரீஅன்னையின் சித்தத்தை ஈடேற்ற ஆர்வமுடையவருக்கே அந்தராத்மாவில் வெளிப்பாடாம். வலிய திணிப்பதில்லை. திண்மையின் வண்மையே அருளை நோக்கியிருக்கும். பிற தன்னிச்சைப் படியே.

நவம்பர் 18 ஸ்ரீஅன்னையின் சைத்திய அன்பு ஒன்றே நம்மை வாழ்வில் என்றும் காப்பதாம். பிறவெற்றுப் பிதற்றலே. உண்மையை பிழிவதே. விழி. வீணாகாநிலையாகி உயர்ந்திடுக. ஸ்ரீஅன்னையேகதி. பிற சதி.

நவம்பர் 19 சடத்தில் உடலெடுத்த செந்தாமரை அவதாரம் ஸ்ரீஅலவிந்தரும், மண்மீது வெளிப்பட்ட இறையுணர்வு வெண்தாமரை ஸ்ரீஅன்னையும் சூட்சும வடிவுகள் எத்தனை எடுத்து மகாபிரபஞ்சங்களை இயக்குகிறார் கள் என்பதை சைத்திய ஞானத்தால் அறியக்கூடுமோ? அல்லது அதிமன ஞானம் ஏற்பட்டாலோ?

நவம்பர் 20 ஸ்ரீஅன்னை உடல் அடக்கம் நான்காம் நாள். கூட்டுத்தியானம். ஸ்ரீஅன்னையுடன் ஐக்கியபடா மனித உணர்வு துன்பம், கஷ்டம், சிக்கல், நோய், அஞ்ஞானம், பொய்மை, திறனின்மை, ஏமாற்றம், தோல்வி, அச்சம், பதட்டம், ஆசை பொறாமை, கோபம் வறுமை போன்ற அவஸ்தையில் ருசி கொண்டதே.

நவம்பர் 21 தன்னிலை அறிந்து தன்னை ஸ்ரீஅன்னைக்கு நிவேதிக்க இயலாதவரே ஆடு, மாடு, கோழி, பலியிடும் பாதகர்களாம். பழி, பாவத்திற்கு

அஞ்சா அறிவீலிகளாம். ஆன்மாவினால் மட்டுமே செம்மையாம்.

நவம்பர் 22 ஸ்ரீஅன்னைக்கு அனைத்தும் அர்ப்பணிக்கிறேன் என அகமுறுவது, அவனிமுழுக்க பறைசாற்றுவது, சிறு துகளே அனற்பொறி அளவிற்கும் குறைவான செயலே. பணிவே, அடக்கமே, எளிமையே ஏற்ற தொண்டாம்.

நவம்பர் 23 தீவிர பரமபக்தன் என பறைசாற்றுவது பரிதாபமே. கடுகை கடலாக்குவதாம். பகட்டு பக்தியாகுமா? ஸ்ரீஅன்னையின் சைத்திய அன்பினை அகத்தில் அருள அவள் மலரடியில் கிடப்போம். குன்றா நிம்மதி. வென்றிடுமாம்.

நவம்பர் 24 தரிசனநாள். தன்முனைப்பைத் தவிர்த்தவர் தன்னுள் ஸ்ரீஅன்னையை உணர்வர். முழுமைச் சரணத்திற்கு முனைவர். சக்தியே உயர் உணர்வே.

நவம்பர் 25 ஸ்ரீஅன்னை நம்மை ஆள்வதால் அக உணர்வு, புற உணர்வை பிரித்துக்கண்டு விடுபட்டு ஸ்ரீஅரவிந்தருள் லயிப்பதே அமரத்துவ இயற்கையாம்.

நவம்பர் 26 ஸ்ரீஅன்னையின் சக்தியும், சாந்தியும் அனுபவித்த அந்தராத்மாக்களுக்கு நேர்வழி கிட்டியது. உண்மை உணர்வே. உயர்வே. ஒளியே.

நவம்பர் 27 கீழ்இயல்பிற்கு ஆதரவாகாதே. அபாயமே. உபயாம் உறிஞ்சப்படும். ஸ்ரீஅன்னையிடம் ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிடல் உத்தமம். உகந்தது. உன்னதமாவாய். உயர்வாய்.

நவம்பர் 28 ஸ்ரீஅரவிந்தமிராவின் சாதகர்களுக்கு வலுவான இச்சா சக்தி, திடசங்ற்பம், உள்ளத்து உறுதி போன்ற யோகத்திற்கு உரியவையே மூச்சு. சித்தமே நிகழுமாம்.

நவம்பர் 29 மனத்தெளிவே ஸ்ரீஅன்னையின் ஒளிசுடறாகி பேரறிவாகிட, உள்ளத்தின் உறுதியால் சைத்திய அன்பே அவனித்தாயாகிட, இறைவாழ்வின் வலிமையே மகாசக்தியாகிட ஸ்ரீஅரவிந்த உண்மையை உணர்வோம். அனுதினமும் தொழுவோம். அதிஉணர்வே ஆழுகையாம்.

நவம்பர் 30 நமது உண்மைவழி ஆசானும், ஆண்டவனும், ஸ்ரீஅன்னையே. சைத்திய தூய்மை நேர்மை தொண்டால், காலத்தை துரிதமாக்கி கானல் நீராகாது. வெற்று கனவாகாது. கனியவைத்து, இனிய நிலையுண்டாக்கி மகிழ்வூட்டுமாம்.

டிசம்பர் 1 ஸ்ரீஅரவிந்தரின் உண்மை சீடரின் உருவைக் கண்டாலே 'மதர்ஸ்ரீஅரவிந்தாய' எனும் மந்திரம் அகத்தில் எழுகிறது. அவருள் ஸ்ரீஅன்னையின் அம்சங்கள் எத்தனையோ.

டிசம்பர் 2 ஆஸ்ரம மைதானத்தில் விளையாட்டு தினம். இன்னும் ஒரு சாதகரிடம் ஸ்ரீஅன்னையின் தெய்வ அன்பு வெளிப்பட்டு பிறருக்குள் பாய்கிறது. அன்புக்கடலோ? ஆர்வத்தால் கூடுமோ?

டிசம்பர் 3 மற்றுமொரு குழந்தையிடம் எண்ணிலா நிறை அமைதி சூழ்கிறது. இதயத்தைக் கவ்வி. உடலைப் பணிவுண்டாக்குகிறது. உருவங்கடந்த உணர்வு எல்லையற்றதோ?

டிசம்பர் 4 பிரிதொரு பிரதான நண்பசீடரின் பார்வை ஸ்ரீஅரவிந்தருடையதோ? நாடியும், நரம்பும் அசையா மோனசக்தி வீச்சில் இதயத்துடிப்பின்றி உணர்வானது நிசப்தமாம். இயங்காதது, நிலையானது. இறந்தாலும் இருப்போமா? வியப்பே. வினோதமே.

டிசம்பர் 5 ஸ்ரீஅரவிந்தர் உடலை விட்டுப் பிரிந்தது. (சித்தி) தரிசன நாள். நேர்மையும், பொறுமையும் யோகமாக்கிய பிரதான ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னை அமைப்பு தலைமை பொறுப்பாளர் தானே அனைவருக்கும் கடையவறாம் யோகம் என்பது தெரியாதாம் ஸ்ரீஅன்னையிட்ட. தொண்டேகுறியாம். என்னே! எளிமை. ஒளிப்பறவையன்றோ.

டிசம்பர் 6 அன்ன பிரம்மம் என்பர். ஸ்ரீஅன்னையின் அமுது படைக்கும் பாக்கியம் பராக்கிரம சாலிக்கே. காலத்தால் நிறைவாகி கூட்டத்தால் கூடத்தில் குறைவின்றி சலியா சகிப்புடன் சாக்கடையும் வாரிடும் வலியோரின் நிர்வாகத்தில் ஸ்ரீஅரவிந்தரின் அதிமன பிரசன்னமோ இயக்குவது. இளைப்பாற் றும் இதயத்தில் இனியவளோ. அக்ஷய பாத்திரமாம்.

டிசம்பர் 7 தனது தமையர்களின் மிஞ்சிய வருவாயை யும் ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணித்து ஆனந்திக்கும் பொறுப்பா ளரை பொசுக்கிடும் சுருட்டல் எனும் சுடு சொல்லும் தொண்டைபுடமிடுகிறதாம்.

டிசம்பர் 8 ஸ்ரீஅன்னைக்கு உண்மைத் தொண்டாற்று பவர் மீது உருவாக்கும் களங்கம் கானல் நீராம். தனது உண்மையில் வாழ்பவர் பிறரின் நன்மையறிவர்.

டிசம்பர் 9 ஸ்ரீஅரவிந்தரின் உடல் ஐந்தாம்நாள் அடக்கம். கூட்டு தியானம். உண்மையை சிறுமைப்படுத்துபவர் ஸ்ரீஅன்னையின் பெருமைக்குள்ளாகார். குழப்பாதவரே குணக்குன்றுகள். என்றும் நிலைப்பர். வென்றிடுவர்.

டிசம்பர் 10 அமைதி பெருகினால் ஸ்ரீஅன்னையின் அருள் சூழலே. தொண்டு தொடரின் நித்தமும்

நிறைவே. பக்தி பரவசத்தால் வளமான வாழ்வே. ஒருமுனைப்பே உண்மை உணர்வே. நல்ல உள்ளமே ஸ்ரீஅன்னையின் வழியாம்.

டிசம்பர் 11 ஸ்ரீஅன்னையின் அன்பைஅடை துன்பத்தைத் துடை. அஞ்ஞானமே தடை. மெய்யமையால் உடை பலவீனமே பகை ஆன்மபலத்தால் நகை பொய்மையே அசுரன். சைத்தியமே தீரன். அருளால் அல்லல் அகன்ற அவனி என்றும் ஸ்ரீஅரவிந்தமே!

டிசம்பர் 12 அனைவரையும் அரவணைப்பதே ஸ்ரீஅன்னைத்துவம். அருளை அழிப்பதோ அசுரத்துவம். இருளை நீக்குவதே சைத்தியத்துவம். ஸ்ரீஅரவிந்தரை அடைவதே ஆன்மீகத்துவம்.

டிசம்பர் 13 ஸ்ரீஅன்னையின் ஆன்மீக உணர்வு செயல் விதி சன்மார்க்க விதியை விட உயர்வாம். அந்தராத்ம திறவானால் தெளிவாம். ஒதுங்கா, ஒடுங்கா, ஒதுக்கா உண்மையன்றோ. இறைசித்தப்படியாவது.

டிசம்பர் 14 ஸ்ரீஅன்னையின் ஆன்மீக உண்மையை இயற்கையில் வெளிப்படுத்துவது உண்மையான உணர்வு ஒளியுடையதாயின் ஸ்ரீஅரவிந்த உண்மை சக்தி, சித்தமே ஈடேறும். இன்னல், இடர், இருளற்ற இசைவுண்டாகுமாம்.

டிசம்பர் 15 வீசால விஸ்வமோனத்தில் மூழ்குவதைவிட ஸ்ரீஅரவிந்த ஆன்மீக மோனம் (Silence) புதிய படைப்பினை அருள்வது. ஸ்ரீஅன்னையே நமக்கு உகந்ததை அந்தராத்மாவில் ஆர்வத்திர்கேற்ப அமைக்கிறார். நன்றியுணர்வே சிறப்பாக்கும்.

டிசம்பர் 16 ஸ்ரீஅரவிந்த யோகம் முழுமையாக சித்திக்கத் தீவிர சாதகர் சாவுக்குரிய காம அனுபவம்

வீரியதிறனின்றி அதிமனவாழ்வை வீழ்த்திடாதிருக்க அவசேதன இருள் பலவீனங்களைக் களைத்து, கனலாக்கிட சக்தி, ஒளி, ஸ்ரீஅன்னையின் பிரசன்னத்துடன் ஆர்வத்தோடு நிவேதிக்கிறார்கள்.

டிசம்பர் 17 ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்திற்கு தரிசன நாட்களில் பக்தர்கள் கூட்டம் கடற்கரை சாலை வரைக்கும் ஆகிறது. எதிர்காலத்தில் கடல் நீரே பின்வாங்கி இடம் விடுமாம். சற்று அகலப்படுத்தும் பணியும் நிகழ்கிறது. எல்லாம் ஸ்ரீஅன்னையின் மகிமையே.

டிசம்பர் 18 'வைகறை' ஆசிரம வெளியீட்டு புத்தகத்தில் எனது பிரசன்னம் அப்படியே வெளிப்படுகிறது. என ஸ்ரீஅன்னையே கூறியிருப்பதால் அதை ஆழ்ந்து படிப்போரிடம் சைத்திய ஸ்ரீஅன்னை நிரந்தரமே.

டிசம்பர் 19 ஸ்ரீஅன்னையின் தியானமும் பிரஞ்சு மொழியிலே படித்தால் இன்னும் மிக நல்லதாம் சமஸ்கிருதத்தில் மந்திரம் போலோ? பிரார்த்தனையும் எதிர்ப்பைவிட ஏற்பே சிறப்பாம்.

டிசம்பர் 20 ஸ்ரீஅரவிந்த யோகத்தில் ஸ்ரீஅன்னையே மானுட குறைகளகற்றி பூரண தெய்வீகமாக மனிதனுள் இறைவனை வளரச்செய்கிறார். அவளின் குழந்தைகளானவருக்கு மிக துரித வளர்ச்சியே.

டிசம்பர் 21 மன உணர்விற்குப்பின் மனித இனம். அதுபோல் ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னையின் அதிமன உணர்வின் இறக்கத்திற்குப்பின்பே அதிமனித சமுதாயம். பரமன் ஸ்ரீஅரவிந்தரே எந்த யோக முறையிலுமில்லாததை அருளியுள்ளார். முழுச்சரணடைவோம். எல்லாம் சித்திக்க.

டிசம்பர் 22 ஸ்ரீஅன்னையின் ஆன்மீக துணிகரச்செயல் பழைய வழியல்ல. முற்றிலும் புதியது. எளியது. வலிய ஆற்றலுடன் அகந்தையிலா அடக்கமானது. புவி உலகிற்கே உரியது உகந்தது, உயர்ந்தது. உண்மையானது. உன்னதமானது. உள்ளாழ்ந்து உணர்வு ஆவோம்.

டிசம்பர் 23 ஆன்மீக வாழ்விற்கும், சாதி, சமயங்களுக்கும் ஒருவித சம்மந்தமுமில்லை என நமது ஸ்ரீஅன்னையே கூறியுள்ளார். பொதுவான தூய்மை, ஒருமை, தொண்டு, பக்தி, சைத்திய அன்பு, தேவையே. இசைவாய் இடஞ்சல் இரைச்சலின்றி இறைமையாவோம். உண்மைக்கு உகந்தபடி வாழ்வதே உத்தமம். உபத்திரம் பவித்ரமாகாது.

டிசம்பர் 24 ஸ்ரீஅன்னையின் சைத்திய புருஷனுள் வாழாதவரை அடிமையே. உண்மை சுதந்திரம் அந்தராத்மாவினுள் ஆழ்ந்திடுவோம். அருளும், பொருளும் நிறைவேயாம்.

டிசம்பர் 25 பிறர் நம்மை எப்படி நடத்தினாலும் கசப்பின்றி ஸ்ரீஅன்னையின் அன்பு உள்ளாகிடுவோம். ஆனந்தவாழ்வே.

டிசம்பர் 26 ஒவ்வொருவருள் உள்ள சைத்தியபுருஷன் புவிக்கு பிரபஞ்சதத்திற்கு, பிற சூட்சம உலகிற்கும் தனித்தனியே ஏதோ ஆற்றவந்துள்ளது. ஆயினும் ஸ்ரீஅன்னையின் ஆணைப்படியே சித்தப்படியே இயங்குகிறது. உணர்வே தெளிவு.

டிசம்பர் 27 அவசேதனத்துள் ஸ்ரீஅன்னையின் தலையீட்டால் அதிசேதனமாகப் பரிணமிக்க நமது ஆர்வம் அதி உணர்வாகட்டும். தேவையான உண்மை காரிருளின் காலத்தை வெல்கிறது.

டிசம்பர் 28 அகத்தில் ஸ்ரீஅன்னையின் அதி உடலுடையோர் புற உலகில் சாதாரணமாகத் தோன்றினாலும், ஸ்ரீஅரவிந்த சக்தியின் நேரிடை செயலானவறாம். உண்மை, சைத்தியம், அதிமனமே, நிறைகுறையா. குறை நிறையாகலாம்.

டிசம்பர் 29 ஸ்ரீஅன்னைவழி ஆன்மீகத் தேவை உணர்வே ஜீவ சக்தியின் விழிப்பாம். தனதுண்மையைக் கண்டு வாழா வாழ்வு அதிருப்தியே. தீராதவிப்பே.

டிசம்பர் 30 ஸ்ரீஅரவிந்த உணர்வு ஒன்றே ஸ்ரீஅன்னைக் குழந்தைகளின் உண்மை ஆற்றல் மிகு இருக்கை. செயற்கையற்ற இறைமை: சைத்திய வாழ்வு.

டிசம்பர் 31 ஸ்ரீஅன்னையுள் அந்தராத்ம வாழ்வமைத்த பக்த, முக்த, சாதகர்களை புற உலக ஆளுகை உணர்வனைத்தும் ஒன்றாகத் தாக்கினாலும் தகர்க்க முடியாது. சக்தியிழந்து சரணடைந்து தொண்டாற்றி தானும் அகமாகிடுமாம்.

* * *

மலர்தொண்டு, ஊதுபத்தி, வைகறை சந்தா, கேசட், போட்டோ ஆசிரம வெளியீட்டு புத்தகங்கள், தரிசன நாட்களுக்குச்செல்ல, சத் சங்கம், தியானிக்க .....

போன்றவைகளுக்கு விளக்கம் பெற

Om Bavatharini, Justice Natarajan
Sri Aurobindo Relic Centre
23, amman Street, Sakthi Nagar
West Tambaram, Madras - 600 045.
Phone : (044) 2367054

Smt. Thilaga, Chaithanya, Thiriveni, Kanagaraj
Om! Sri Aurobindo Mira Spiritual Federation
The Mother House
No.6, Annai Indira Nagar,
Pettichettipet Main Road,
Lawspet (P.O) Pondicherry - 605 008
Phone (0413) 238300

Dr. Vijayalakshmi, S.K. Srinivasan, Sri. Marikumar, Sri. Rajarathnam, Boopala, Harikumar, Jothi
Sri Aurobindo mandir
The Mother's Spiritual Federation
Gunduthoppu Gaddalalli
Sri Aurobindo Road, Kothanur (Post)
Bangalore - 560 077.
Phone (080) 5477927

Sri Jayaprakasam, Sri. Thirumurugan
`Vaikarai Service Society' Sri Aurobindo Relic Mandir
Rasi Nagar, Opp. Mohan Nagar, Salem Steel Plant
Salem - 636 030.
Phone : (0427) 483094

Smt. Rohinima Balasubramaniam
Smt. Jeeva, Managalam (Madras) and Devotees
Om! Sri Aurobindo Mira Spiritual Federation
18, Subramania Layout, Trichy Rd., Coimbatore 641 045
Phone : (0422) 312417

Sri Babu Dhandapani, Smt. Thirumakkal
Smt. Kabila Madhivellal, Smt. Rajathi
The Mother Mira Spiritual Federation
8, Puliyadi Ramasamy Iyer Lane
Manjana Kara Street, Madurai 625 001


Sri Ravi, Smt. Ramalakshmi, Ahana
Sri Aurobindo Bakthi Spiritual Federation
Sri Ganesh Agencies, 12-A, North Street
Thiruthuraipoondi 614 713. Phone : (04369) 22153

Sri. Ganesan, Smt. Veerammal
Sri Aurobindo Pooja House
10, Ramalinga Nagar, (West Extension)
(Behind Sivasakthi Kalyana Mandapam)
Woraiyur, Trichy 620 003. Phone : (0431) 762881

Sri. V. Jayaprakash, Savithri, Smt. Latha, Aravind
Sri Aurobindo Savithri Spiritual Federation
No.15, Kanniamman Temple Street
Opp. DSP Office, Cheyyar, Phone : (04182) 22410

Sri. Sakthivel, Sri. Kandasamy, Sri. Ramachandran
Sri. Rajaram, Mrs. Arthanari, Mr. Pandian (Headmaster)
Sri Aurobindo Sakthi Spiritual Fedration
55, MLA Street, Sithiyankottai (Post), Dindigul Post

Sri Aravindar Sriannai Sadana Peedam
Thiyagaraja Street, Villupuram. Phone: 24842
Sri Anantharam Auditor, Sri Murugadoss

## ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்தில் விசேஷ தரிசன நாட்கள்

| | |
|---|---|
| ஜனவரி 1 | புதுவருஷப் பிறப்பு ஐஸ்வரிய நாள் |
| பிப்ரவரி 21 | ஸ்ரீஅன்னை பிறந்த தூய நாள் |
| பிப்ரவரி 29 | அதிமன (இறைவனின்) நாள் |
| ஏப்ரல் 24 | ஸ்ரீஅன்னை (பிரான்ஸிலிருந்து) புதுவைக்கு நிரந்தரமாக வந்த நாள் |
| ஆகஸ்ட் 15 | ஸ்ரீஅரவிந்தர் பிறந்த பொன்னாள் (இந்தியாவின் சுதந்திர தினம்) |
| நவம்பர் 17 | ஸ்ரீஅன்னை மகாசமாதி அடைந்த நாள் |
| நவம்பர் 24 | ஸ்ரீஅரவிந்தர் சித்திபெற்ற (இறைவெற்றி) நாள் |
| டிசம்பர் 5 | ஸ்ரீஅரவிந்த மகாசமாதி அடைந்த நாள் |

ஆசிரமத்தில் காலை 6.00 மணி முதல் 6.30 மணிவரை கூட்டு தியானமும் பகலில் ஸ்ரீஅரவிந்தர் ஸ்ரீஅன்னையின் அறைகள் தரிசனம்

ஆரோவில்லில் ஜனவரி 1, பிப்ரவரி 28, 29, ஆகஸ்ட் 15 எல்லா நாட்டு பிடிமண் அடங்கிய ஸ்தூபி முன் அக்னிகுண்டம் வளர்த்து காலை 5.30 மணிமுதல் 6.00 மணிவரை திறந்தவெளி தியானம் பிறகு மாத்திரு மந்திரில் தரிசனம்

ஓம் நமோ பகவதே - ஸ்ரீஅன்னை

மனிதனுள் இறைவனை வளரச்செய்யும்

**'வைகறை'** படியுங்கள்

ஆண்டு சந்தா ரூ.25; ஆயுள் சந்தா ரூ.300

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி

'வைகறை', ஸ்ரீஅரவிந்தர் ஆசிரமம்

பாண்டிச்சேரி - 605 002

*ஸ்ரீஅன்னையிடம் அன்புடன் நெருங்கவைக்கும்*

*திருமூர்த்தி சத்யத்தின் வெளியீடுகள்*

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னைக்கு ஆயிரம் (முதல் பாகம்) | விலை ரூ. 15 |
| 2. | அக உணர்வு மலர்கள் அனைத்தும் ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னைக்கே அர்ப்பணம் (முதல் பாகம்) | விலை ரூ. 18 |
| 3. | ஆண்டு முழுவதும் 'ஓம் ஸ்ரீஅரவிந்த மிராவின்' யோகசக்திகள் (366) | விலை ரூ. 14 |
| 4. | ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னையின் பக்திப்பாடல்கள் கேசட் தமிழ் மற்றும் கன்னட மொழியில் | விலை ரூ. 25 |

மணியார்டர், டிராப்ட் அனுப்பவேண்டிய முகவரி

## *திருமூர்த்தி*

தி மதர் ஹவுஸ், 6, அன்னை (இந்திரா) நகர்

பாரதி நகர் விரிவு, பெத்துசெட்டிபேட் மெயின்,

லாஸ்பேட் அஞ்சல், பாண்டிச்சேரி - 605 008

போன் : (0413) 238300